# கொளஞ்சியப்பர்

அருள் வரலாறு



31214

டாக்டர். இரா. செல்வக்கணபதி

# கொளஞ்சியப்பர்

## அருள் வரலாறு

ஆசிரியர்:
'செந்தமிழ் வாரிதி'
டாக்டர். **இரா.செல்வக்கணபதி** எம்.ஏ.,பி.எட்.,பிஎச்டி.,
தமிழ்ப் பேராசிரியர்
தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரி,
தருமபுரம், மயிலாடுதுறை-609 001.

அச்சிட்டு வழங்குவோர்:
**ஆ. தமிழ்ச்செல்வன்**
உரிமையாளர்
ஏ. டி. எஸ். வணிக நிறுவனங்கள்
ரயிலடி, மயிலாடுதுறை.

வெளியீடு:
**அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில்**
மணவாளநல்லூர் (அஞ்) 606 003.
விருத்தாசலம் வட்டம், தென்னாற்காடு மாவட்டம்

**28—3—1991**

உரிமை: ஆசிரியர்க்கே

படிகள்: 1000

விலை: ரு.

நூல் கிடைக்குமிடம்:

நிர்வாக அதிகாரி,

அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில்

மணவாளநல்லூர் (அஞ்) 606003

விருத்தாசலம் (வட்) தென்னாற்காடு (மா.வ)

தொலைபேசி எண்: 232.

அச்சிட்டோர்:

பாபுலர் அச்சகம், துலார்க்கட்டம், மயிலாடுதுறை.

கொளஞ்சியப்பருக்கு வலதுபுறம்எழுந்தருளியுள்ள



அருள்மிகு சித்திவிநாயகர் (மூலவர்)

உ

சிவ சிவ

தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி - 623 206
பசும்பொன் தேவர்
திருமகன் மாவட்டம்,
தொலைபேசி: குன்றக்குடி 27
நாள்: 12—3—91

# வாழ்த்துரை

பேராசிரியர், டாக்டர், இரா. செல்வக்கணபதி அவர்கள் எழுதிய "கொளஞ்சியப்பர் அருள் வரலாறு" பயனுடைய நூல். சராசரி மக்களையும் கொளஞ்சியப்பரிடத்தில் ஆற்றுப்படுத்தும் திறனுள்ள நூல். பழுத்த தமிழ்ப் புலமையின் பொலிவும், நயந்தினிது அருள் நலம் வேட்டு நிற்கும் பான்மையும் இந்நூலுக்குரிய சிறப்புக்கள். கொளஞ்சியப்பர் அருள் வரலாற்று நூலைப் பலரும் படித்துப் பயனடைய வேண்டும் என்பது நமது விருப்பம், விழைவு.

கொளஞ்சியப்பர் அருள் வரலாற்று நூலாசிரியருக்கும், நூல் வெளிவர உதவியாக இருந்தவர்களுக்கும் கொளஞ்சியப்பர் திருவருள் நலம்பல அருளிச் செய்வாராக.

இன்ப அன்பு,
குன்றக்குடி அடிகளார்

சிவ சிவ

கயிலைமாமுனிவர்
**ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**
அதிபர், ஸ்ரீ காசிமடம்

திருப்பனந்தாள்—612504
(தஞ்சை மாவட்டம்)
தேதி: 15—3—91

# வாழ்த்துரை

தருமபுரம், டாக்டர். இரா, செல்வகணபதி அவர்கட்குச் செந்திலாண்டவன் திருவருள் முன்னிற்க.

"கொளஞ்சியப்பர் அருள் வரலாறு" - எனும் தலைப்பிட்ட, வரலாற்று நூலொன்றை, மயிலாடுதுறை, ஏ.டி.எஸ். நிறுவன உரிமையாளர் திரு.ஆ. தமிழ்ச்செல்வன் அவர்களின் பொருளுதவியுடன், பங்குனி உத்திரத் திருநாளில் வெளியிடுவதறிந்து மகிழ்ச்சி.

பீடுடைய பெம்மானின் பெருங்கருணைத் திறத்தை விளக்கி நிற்கும் திருக்கோயில்களின் வரலாற்றுத் தொகுப்புப் பலர்க்கும் பயன்களை நல்கும் என்பது உறுதி.

நூல் வெளியீடு சிறப்புற நிகழச் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்.

சிவ சிவ

மணவாள நல்லூரில் கோயில் கொண்டுள்ள



அருள்மிகு கொளஞ்சியப்பர் (மூலவர்)

உ

முருகா

திருமுருக
கிருபானந்தவாரியார்

சென்னை
10—3—91

## சாற்றுக்கவி

## நேரிசை வெண்பா

# வாழ்த்துரை

புகழ்கொளஞ்சி யப்பர் புனிதவரலாற்றைத்
தகவுடன் செந்தமிழால் தந்தான்-திகழ்மதிசேர்
செல்வக் கணபதி செஞ்சொல் மழைக்கொண்டல்
நல்வளமாய் வாழ்க நயந்து.

அன்பன்,
கிருபானந்தவாரி

# வாழ்த்துரை

வ. ராமதாஸ் ஐ. ஏ. எஸ்.,
ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-600004.

திருமுருகன் கோயில் கொண்டுள்ள பிரார்த்தனைத் திருத்தலங்களில் மிகப் புகழ்பெற்ற ஆலயமாகத் திகழும் ஓர் ஆலயம் விருத்தாசலம் வட்டத்தில் அமைந்துள்ள அருள்மிகு கொளஞ்சியப்பர் ஆலயமாகும்.

ஒரு குடும்பத்தில் கடைசிப் பிள்ளையை 'குட்டி' என்றும் 'கொளஞ்சி' என்றும் அழைக்கும் தமிழ் மரபிற்கேற்ப, சிவகுடும்பத்தின் இளைய குமரனான முருகருக்கு இங்குக் கொளஞ்சியப்பர் எனத் திருநாமம் சூட்டப்பட்டு வழிபடப் பெறுகிறது.

பக்தர்களின் வினைதீர்க்கும் வடிவேல் முருகன், இங்கு தன்னை அண்டினோரின் தீராநோய் தீர்க்கும் கண்கண்ட தெய்வமாக விளங்குகிறான். பிறரிடம் பொருள் கொடுத்து நம்பி மோசம் போனவர்களும், பகைவர்களால் துன்பப் படுபவர்களும் எழுத்து மூலம் தம்குறையைத் தெரிவித்து முறையிட, அவர்களின் கோரிக்கைகளை ஏற்று நியாயம் வழங்கும் நீதிதேவனாகவும் அருள்மிகு கொளஞ்சியப்பர் அருள்புரிவது இத்திருத்தலத்திற்கே உள்ள தனிப்பெருஞ் சிறப்பு எனலாம்.

அருவும் உருவும் ஆகிக் கைதொழுவார் கலிதீர்க்கும் கண்கண்ட கடவுளாக விளங்கும் அருள்மிகு கொளஞ்சியப்பர் அருள் வரலாற்றை தமிழ்ப் பெருங் கடலான மறைமலை அடிகளாரின் வழிவந்த செந்தமிழ்ச் செல்வரும், தருமபுரம் ஆதீனக் கலைக் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியருமான டாக்டர்

இரா. செல்வகணபதி அவர்கள் விரிவுபட ஒரு நூலாக எழுதி வெளியிடுவது அறிந்து நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். நூலினை வெளியிட மயிலாடுதுறை ஏ.டி.எஸ். நிறுவன உரிமையாளர் திரு. தமிழ்ச்செல்வன் அவர்கள் பொருள் உதவி செய்திருப்பதும் போற்றுதலுக்குரிய திருப்பணியாகும்.

சிவபூஜை, அடியார்பூஜை, குருபூஜை ஆகிய பூஜைகளுக்கு எத்துணைப்பயன் உண்டோ, அத்துணைப் பயன் தெய்வ நூல்களை ஓதுவதாலும் உண்டாகும் என்று ஆன்றோர்கள் கூறுவர்.

"ஞான நூல்தனை ஓதல், ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல், தான்கேட்டல் நன்கு
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில் ஞான பூசை"

என்ற அருணந்தி சிவாச்சாரியாரின் அருள் வாக்கிற்கிணங்க இப்பயன்மிகு நூலைப்பாரினர் ஓதப் படைத்தளிக்கும் நூலாசிரியர் சைவச் செங்கதிர், டாக்டர், இரா. செல்வ-கணபதி அவர்களையும், நூலைப் பதிப்பிக்கப் பொருளுதவி புரியும் அறப்பணிச் செல்வர் திரு ஆ. தமிழ்ச்செல்வன் அவர்களையும் அன்புள்ளத்துடன் பாராட்டுகிறேன்; வாழ்த்துகிறேன். இறையன்பர்கள் அனைவரும் இத்திருவருள் நூலைப் படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

"சீர்மலிந்த நடுநாட்டுச் சிவனுறையும் விருத்தகிரி
பேர்மலிந்த நகர்மேற்கில் மணவாள நல்லூரில்
தார்மலிந்த கொளஞ்சியப்பர் தமியேங்கள் நோய்தீர்த்து
ஏர்மலிந்த நன்மைதரும் எம்மான்தன் அடிபோற்றி"

அன்புடன்,
வ. ராமதாஸ்

# வாழ்த்துரை

செந்தமிழ்ச் செல்வர் கல்விக் காவலர்
இயலிசை மாமணி தர்மரட்சாமணி

வித்துவான் டாக்டர் **ம. வே. ஜயராமன்** அவர்கள்
எம்.ஏ.,டி.லிட்.

நிறுவனர்: ஸ்ரீ வெங்கடேசுவரா கல்வி நிறுவனங்கள்,
பெங்களூர்.

சீவான்மாக்களாகிய சிற்றுயிர்கட்கு உற்ற துணையாய் விளங்குவது கல்வி. அது அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பேறுகளையும் நல்க வல்லது; சென்ற விடமெல்லாம் புகழை நிலை நிறுத்துவது; கவலை வரின் கைகொடுத்து உதவுவது. இது தமிழ்மாமுனிவர் குமர குருபர அடிகளாரின் அருங்கருத்தாகும். கல்வியின் பயன் வாலறிவன் நற்றாள் தொழுதல் என்றும், சாந்துணையும் கற்றல் வேண்டும் என்றும் வற்புறுத்துகிறார் வள்ளுவப் பெருந்தகை.

இவ்விழுமிய கருத்துக்களை யெல்லாம் நன்கு உணர்ந்து போற்றிவரும் நண்பர் சைவச் செங்கதிர், முத்தமிழ் அரசு, சைவத் தமிழ்மணி, செந்தமிழ்ச்செல்வர், செந்தமிழ் வாரிதி, பேராசிரியர் டாக்டர் இரா. செல்வக்கணபதி அவர்கள் 'கொளஞ்சியப்பர் அருள் வரலாறு' என்ற அருமையான அருள் நூலினைத் தமிழ் உலகிற்குப் படைத்து வழங்குவது பெருஞ் சிறப்பாகும். வாழ்த்தி வரவேற்கத் தக்கதாகும்.

இந்நூல், பழமலையென்றும், திருமுதுகுன்றமென்றும் புகழப்படும் விருத்தாசலத்துக்கருகில் உள்ள கொளஞ்சியப்பர் திருக்கோயிலில் வெளியிடப் பெறுதல் சிறப்பினும் சிறப்பாகும்.

இவ்வருள் நூல் மயிலாடுதுறை A. T. S. நிறுவன உரிமையாளர் உயர்திரு A. தமிழ்ச்செல்வன் அவர்களின் பொருட்கொடையால் வெளியிடப்படுவதறிந்து பெரிதும் மகிழ்கிறேன்.

பேராசிரியர் டாக்டர் இரா. செல்வக்கணபதியவர்களையும், உயர்திரு A. தமிழ்ச்செல்வன் அவர்களையும் தமிழ் கூறும் நல்லுலகம் நன்றியுடன் போற்றக் கடவதாகும்.

திருக்கொளஞ்சியப்பர் திருவருளால் அவர்கள் இருவரும் சீருடனும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

தமிழுலகம் இந்நூலினைப் படித்து நற்பயன் பெறுவதாக.

பெங்களூர்
14—3—91

இங்ஙனம்.
ம.வே. ஜயராமன்

கு. கல்யாணம், எம்.ஏ.,
நிர்வாக அதிகாரி

அருள்மிகு கொளஞ்சியப்பர்
திருக்கோயில்
மணவாளநல்லூர் (அஞ்)
606 003

# வாழ்த்துரை

அருள்மிகு கொளஞ்சியப்பர் இன்னருளால், இத்திருக் கோவிலுக்கு, முறையான அருள்வரலாற்று நூல் இன்று மலர்கிறது. இம் முயற்சி திருக்கோயில் நிர்வாகத்திற்கும் பக்தர்களுக்கும் பெரிதும் மகிழ்ச்சி தருவது. 'கொளஞ்சியப்பர் அருள் வரலாறு' என்ற இவ்வினிய நூலில், எல்லாத் தகவல்களையும் திரட்டி அழகுற எழுதி உதவிய பேராசிரியர் டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி அவர்களின் அரிய முயற்சிக்குப் பாராட்டுக்கூறி நன்றி தெரிவிக்கிறேன்.

இந்நூலை, முழுவதும் தம் பொருட்செலவில் அச்சிட்டு, நூல்கள் முழுவதையும் இத்திருக் கோயிலுக்கே வழங்கி, அவற்றை விற்பனை செய்து, வரும்தொகையைத் திருக் கோயிலுக்கே சேரும்படிச் செய்த, மயிலாடுதுறை ஏ.டி.எஸ். வணிக நிறுவனங்களின் உரிமையாளர். திரு. ஆ. தமிழ்ச் செல்வன் அவர்களுக்குக் கொளஞ்சியப்பர் திருவருள் எல்லா நலன்களும் வழங்கும் என்பது உறுதி.

இந்நூலுக்கு அணிசேர்க்கும் வகையில் ஆசியுரை மற்றும் வாழ்த்துரைகள் வழங்கிச் சிறப்பித்துள்ள தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் கயிலைமா முனிவர் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அளர்கள், திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்கள், பெங்களூர் செந்தமிழ்ச் செல்வர் டாக்டர் திரு. ம. வே. ஜயராம ஐயர் அவர்கள் ஆகியோருக்குத் திருக்கோயில் சார்பில் நன்றி தெரிவிக்கும் கடப்பாடு உடையேன்.

தமிழ்நாடு அரசு, இந்துசமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் மாண்புமிகு திரு.வ. இராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் இந்நூலுக்கு வழங்கியுள்ள வாழ்த்துரை, புதிய அழகைச் சேர்க்கிறது. அவர்களுக்கும் திருக்கோயில் சார் பாக நன்றி தெரிவித்து மகிழ்கின்றேன்.

அன்பர்கள் இந்நூலைப் பெற்று, ஓதி உணர்ந்து, நல மெலாம் பெற்று வாழ அருள்மிகு கொளஞ்சியப்பர் இன்னருளைப் பிரார்த்திக்கிறேன்.

*மணவாளநல்லூர்*
28—3—1991

அன்புடன்
கு. கல்யாணம்

# முன்னுரை

தென்னாற்காடு மாவட்டம், விருத்தாசலத்தை அடுத்த மணவாளநல்லூரில் கோயில் கொண்டு அருள் வழங்கும் அருள்மிகு கொளஞ்சியப்பர், பல்லாயிரம் அன்பர்களால் குறிஞ்சிக் கடவுளான முருகப்பெருமானாகக் கருதி வழிபடப்பெறுகிறார். இத்திருக்கோயில் பங்குனி உத்திரப் பெருவிழாவில் கடந்த பத்து ஆண்டுகளாகக் கலந்து கொண்டு உரையாற்றி மகிழும் இனிய வாய்ப்பு எனக்கு முருகன் அருளால் அமைந்தது. இத்தொடர்பு கொளஞ்சியப்பர் மீது ஈடுபாடாக வளர்ந்து வந்தது. அதன் விளைவாக திருவருளும், குருவருளும் துணைநிற்க, அன்பர் பலரது தூண்டுதலால் 'கொளஞ்சியப்பர் அருள் வரலாறு' என்னும் இவ்வினிய நூல் இதுபோது வெளிவருகிறது.

வரலாற்று நூலை உருவாக்க இலக்கியம் மற்றும் கல்வெட்டுச் சான்றுகள் ஏதும் கிடைத்தில. சிறுசிறு வெளியீடுகளையும், வழிபட்டு அருள்பெற்ற அன்பர்களின் அருள் அனுபவங்களையும், செவிவழிச் செய்திகளையும் துணைக்கொண்டு முதன்முயற்சியாக இச்சிறு நூல் உருவாக்கப்பெற்றுள்ளது.

இந்நூல் ஐந்து இயல்களாகப் பகுத்து எழுதப் பெற்றுள்ளது. 1. முருகனும் தமிழும், 2. மணவாளநல்லூர், 3. கொளஞ்சியப்பர் அருள்வரலாறு, 4. நேர்த்திக்கடன் 5. திருக்கோயில் நிர்வாகம் என்பன அவை. நூல் இறுதியில் திருவாமாத்தூர் தவத்திரு. கு. செ. முருகதாச சுவாமிகள் அருளிய கொளஞ்சியப்பர் பிள்ளைத் தமிழிலிருந்து பருவத்துக்கு ஒவ்வோர் பாடலாகப் பத்துப் பாடல்களும், வேறு சில தனிப்பாடல்களும் இணைக்கப் பெற்றுள்ளன.

கொளஞ்சியப்பர் அருள்வரலாறு இனிது வெளிவர திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (தவத்திரு குன்றக்குடி அடிகளார்) அவர்கள் அருளாசியுரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவடிக்கமலங்களுக்கு என் மன, மொழி, மெய்களாலாகிய வணக்கங்களை நன்றி யோடு சேர்ப்பித்து மகிழ்கின்றேன்.

தம் அறுபதாவது ஆண்டு மணிவிழாவைச் செந்தமிழ்ச் சொக்கனும் தருமைக்குருமணியும் பனைக்கு எழுந்தருளி வாழ்த்த மிகப்பெரிய சமய எழுச்சிப் பெருவிழாவாக நிகழ்த்தி, பல்வேறு நல்லறங்களைச் செந்திற் கந்தன் திருவருளால் புரந்துவரும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத் தின் அதிபர் கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமி அவர்கள், மணி விழாப் பணிகளுக்கு இடையேயும், என் எளிய வேண்டுகோளை ஏற்றருளி இனிய அருளாசியுரை ஒன்றை வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். சுவாமிகளின் அளப்பரிய கருணையை வந்தித்து வணங்கித் திருவடிகளில் நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

நடமாடும் சமய, தத்துவ, தமிழ்ப் பல்கலைக்கழகமாகத் திகழும் திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள் என் வேண்டுகோளை ஏற்று இனியசாற்றுக்கவி ஒன்றை அருளிய கருணைக்கு வணங்கித் திருவடிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

தாம் பொறுப்பேற்ற நாள் முதல் இந்துசமய வளர்ச்சி யில் பேரீடுபாடு கொண்டு கோயில் திருப்பணிகளையும், குடமுழுக்கு விழாக்களையும், பல்வேறு வளர்ச்சித்திட்டங் களையும் மிகச்சிறப்பாக நடத்தி வரும் தமிழ்நாடு இந்து

சமய அறநிலையத் துறையின் ஆணையர் மாண்புமிகு திரு. தி. இராமதாஸ் ஐ. ஏ. எஸ். அவர்கள் பொருள் பொதிந்த இனிய வாழ்த்துரை ஒன்றை வழங்கி இச்சிறு நூலுக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள். அவர்கள் பேரன்பிற்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன்.

பெங்களூர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா நிறுவனங்களின் நிறுவனரும், செந்தமிழையும் - சிவநெறியையும் இரு கண் களாகப் போற்றி வாழ்பவரும், தருமைக்குருமணி அவர் களால் 'செந்தமிழ்ச்செல்வர்' என்ற சீரிய பட்டமளிக்கப் பெற்றுப் பாராட்டப்பெற்றவரும், தமிழ் அறிந்தார் நெஞ் சங்களில் எல்லாம் தம் கொடைச்சிறப்பால் கொலு வீற்றிருப்பவரும், என்னைச் சான்றோர் முன்னிலையில் 'என் அன்பு இளவல்' என்று அறிமுகப்படுத்தி மகிழும் உயர் பண்பாளருமாகிய 'கல்விக் காவலர்', 'இயலிசை மாமணி,' 'தர்மரட்சாமணி' வித்துவான் டாக்டர் திருவாளர் ம. வே. ஜயராமஜயர் எம். ஏ., பி. லிட்., அவர்கள் என் எளிய வேண்டுகோளை ஏற்று அன்பு பொதுளும் அழகிய வாழ்த்துரை ஒன்றை வழங்கி, இந்நூலுக்கு அணி சேர்த்துள்ளார்கள். செந்தமிழ்ச்செல்வர் ஐயா அவர் களுக்கு என் உணர்வுபூர்வமான நன்றி மலர்களைக் காணிக்கை ஆக்குகின்றேன். அவர்கள் நலம் வாழ, குலம் தழைக்க அருள்மிகு. கொளஞ்சியப்பர் தாள் மலர்களை வந்தித்து வாழ்த்துகின்றேன்.

பக்தியையும், உழைப்பையும் தம் இரு கண்களாகக் கொண்டு வாழும் என் இனிய நண்பர். திருவாரூர் மைதீன் ஆ. கோவிந்தராசன் அவர்கள் வாயிலாக எனக்கு அவர் தம் இளவல் மயிலாடுதுறை, இரயிலடி ஏ. டி. எஸ். வணிக நிறுவனங்களின் உரிமையாளர். திரு. ஆ. தமிழ்ச்செல்வன் அவர்களின் இனிய நட்பு அமைந்தது. இளமையிலேயே உயர் பண்புகளைப்பெற்று, அரிய உழைப்பால் படிப்படியே

உயர்ந்து, எல்லார்க்கும் இனியவராகத்திகழும் அவரும் அருள்மிகு கொளஞ்சியப்பர் திருவடிகளில் அளவற்றபக்தி ஈடுபாடு கொண்டவர். வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு பெரிய இன்னல் கொளஞ்சியப்பர் அருளால் அகன்றபோது ஈடுபாடு மேலும் உறுதியாயிற்று. பெருமான் அருள்வரலாற்றைத் தம் சொந்தப்பொருட் செலவில் வெளியிட விரும்பி, நூலை எழுதி வழங்குமாறு அன்புடன் வேண்டினார். கொளஞ்சியப்பர் அருள்வரலாறு வெளிவரத் துணை நின்ற நண்பர் திரு. ஆ. தமிழ்ச்செல்வன், அவர்தம் துணைவியார், செல்வக்குமாரர்களுக்கு நலம்பல பெருகவும், அவர் வணிக முயற்சிகள் மேலும் சிறக்கவும் கொளஞ்சியப்பர் திருவருள் துணை நிற்கும் என்பது உறுதி. அவர்களுக்கும் என் நன்றி உரியது.

இந்நூல் வெளியீட்டில் எனக்கு நல்ல துணையாக நின்று, திருக்கோயில் வரலாறு, நிர்வாகம் முதலியன பற்றி பல்வேறு செய்திகளைத்தந்துதவி, வாழ்த்துரையும் வழங்கிய திருக்கோயில் நிர்வாக அதிகாரி, திரு. கு. கல்யாணம் எம். ஏ., அவர்களுக்கும் அளவற்ற அன்புடன் உதவி வரும் ஆலய, அலுவலகப் பணியாள நண்பர்களுக்கும், இவ்வெளியீடு சிறப்பாக அமைய அரிய ஆலோசனைகள் வழங்கி உதவிய இவ்வாலயத்தின் முன்னாள் அறங்காவலர் குழுத் தலைவர் வழக்குரைஞர், திரு. டி. எஸ். முருகேசன் எம். ஏ., பி. எல்., அவர்களுக்கும், விருத்தாசலம் வழக்குரைஞரும், திருமுதுகுன்றம் இறைபணி மன்றத்தலைவரும், எனது பாசமிகு நண்பருமான திரு. இரா. மெய்கண்டநாதன் பி. எஸ்சி., பி. எல்., அவர்களுக்கும் என் இதய நன்றி.

கொளஞ்சியப்பர் அருள் வரலாற்றை வெளியிட இசைவு தந்த மயிலாடுதுறை இந்துசமய அறநிலைத்

துறைத் துணை ஆணையர், திருக்கோயில் தக்கார், கடலூர் உதவி ஆணையர் ஆகியோர்க்கும் என் நன்றி உரியது.

முகப்போவியம் எழுதி உதவிய நண்பர் மயிலாடுதுறை ஓவியர் திரு. ஆர். இராஜராஜன் (ராஜா) அவர்களுக்கும், மிகக்குறுகிய காலத்தில் இந்நூலை அச்சிட்டு உதவிய மயிலாடுதுறை பாபுலர் அச்சகத்தாருக்கும் என் நன்றி.

இந்நூல் எழுதிய போது உடனிருந்து, கைப்பிரதிகளைச் சரி செய்தும், அடிக்குறிப்புக்களைத் தேடித் தொகுத்தும் உதவிய என் அன்பிற்கினிய மாணவச் செல்வி. ஐ. ரீட்டாமேரி எம். ஏ., எம். ஃபில்., பி. எட். நலம்பல பெற்று வாழ முருகப்பெருமான் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

இந்நூல் அச்சாகுங்கால் அச்சுப் பிரதிகளைப் பார்த்தும் பிழைகள் திருத்தியும் உதவிய என் அன்பிற்கினிய நண்பர் டாக்டர் திரு. சி. சிவசங்கரன் அவர்கட்கு என் நன்றி, அவர்கட்கு முருகன் திருவருளால் நலமெலாம் நிறைய கொளஞ்சியப்பரின் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

முருக பக்தர்களும், அன்பர்களும் இந்நூலைப் பெற்று, படித்து, நலமெலாம் பெற்று நீடு இனிது வாழத் திருவருளும், குருவருளும் துணைநிற்கும் என்ற நம்பிக்கையுடையேன்.

25, இராஜேஸ்வரி நகர்,
மயிலாடுதுறை 609001
28—3—1991

இங்ஙனம்,
இரா. செல்வக்கணபதி



அச்சிட்டு வழங்குதல்: திரு. ஆ. தமிழ்ச்செல்வன் திருமதி. த. சுகந்தி மயிலாடுதுறை.

# அணிந்துரை

**ஆ. தமிழ்ச்செல்வன்**
உரிமையாளர்
ஏ.டி.எஸ். வணிக நிறுவனங்கள்
ரயிலடி, மயிலாடுதுறை.

என் மூத்த சகோதரர் திருவாரூர், மைதீன் திரு. ஆ. கோவிந்தராசன் அவர்கள் எனக்குத் தொழில் பயிற்றுவித்து 1980 இல் திருமணம் செய்வித்தார்கள். 1982இல் மயிலாடுதுறையில் வணிகம் ஒன்றையும் அமைத்துத் தந்து வழிகாட்டினார்கள். வாழ்க்கைக்கு வழிகாட்டிய தோடு; நல்ல பழக்க வழக்கங்களையும், உழைப்பையும், உண்மையின் சிறப்பையும் அறிவுறுத்திய அவர்களே என் வளர்ச்சியின் அடித்தளமாகத் திகழ்பவர்கள். அவர்களை நன்றியோடு நினைவு கூர்ந்து வணங்குகின்றேன்.

ஒன்பது ஆண்டுகளில் நானும், என் நிறுவனங்களும் பெற்ற வளர்ச்சிக்கு அருள்மிகு. கொளஞ்சியப்பரின் அளவற்ற அருளே காரணம் எனத்திடமாக நம்புகின்றேன். இடையில் எனக்கு ஏற்பட்ட பெரிய சோதனையின் போது இப் பெருமானுக்குப் பிராது கட்டினேன். சில நாட்களில் சோதனையின் வேதனையிலிருந்து நான் விடுபடவே கொளஞ்சியப்பர் திருவடிகளில் பற்று மேலும் மிகுந்தது. வாழ்வின் ஒவ்வொரு கட்ட வளர்ச்சியிலும் ஐயன் அருளே துணை நின்று என்னை வளர்த்தது. வளர்த்து வருகிறது. மேலும் வளர்த்து ஆளாக்கும் என்ற உறுதி உடையேன்.

அருள்மிகு கொளஞ்சியப்பர் திருவருளை உலகம் அறிய வெளிப்படுக்கும் எண்ணம் அவன் அருளால் உதித்தது. என் எண்ணத்தை என் இனிய நண்பர் பேராசிரியர், டாக்டர், திரு. இரா. செல்வக்கணபதி அவர்களிடம் தெரிவித்தேன். அவர்களின் அரிய முயற்சியும் இணைந்து இன்று கொளஞ்சியப்பர் அருள் வரலாறு, நூல் வடிவில் வெளிவருகிறது. யாருக்கும் கிடைக்காத வாய்ப்பினை கொளஞ்சியப்பர் எளியேனுக்கு வழங்கி ஆசிர்வதித்துள்ள தாகவே கருதுகின்றேன்.

கொளஞ்சியப்பர் அருள் வரலாற்றை நான் நினைத்த வாறு உருவாக்கி உதவிய டாக்டர் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கியுள்ள அருளாளர்களுக்கும், அளவற்ற ஒத்துழைப்பு நல்கிய நிர்வாக அதிகாரி உள்ளிட்ட அலுவலக நண்பர்களுக்கும், என்பால் அன்பும், என் வளர்ச்சியில் நாட்டமும் மிக்க மற்றும் அனைவருக்கும் என் இதய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொளஞ்சியப்பரின் இன்னருள் எல்லார்க்கும் எல்லா நலன்களும் தர அன்புடன் வேண்டுகின்றேன்.

அன்புடன்,
ஆ. தமிழ்ச்செல்வன்.

## இயல் : ஒன்று

# முருகனும்-தமிழும்

முருக வழிபாடு தமிழகத்தில் தொன்று தொட்டு இருந்து வந்துள்ளது. இதற்கு ஆதாரமாக விளங்குபவை தமிழ் இலக்கியங்களே. சங்ககாலம் தொடங்கி இன்றளவும் முருகன் பற்றிய அருள் நூல்கள் எண்ணற்றவை தோன்றி வந்திருக்கின்றன. இந்நூல்களில் எல்லாம் அவனது அவதாரச் சிறப்புகளும், அவன் நிகழ்த்திய திருவிளையாடல்களும், சூரனை வதம் செய்து வென்றமையும், திருமண நிகழ்ச்சிகளும், எழுந்தருளியுள்ள ஆறுபடை வீடுகளின் சிறப்புகளும் பரக்கப் பேசப்படுகின்றன.

**தொல்காப்பியம்:**

நமக்குக் கிடைத்திருக்கும் இலக்கியங்களுள் மிகவும் தொன்மையானது தொல்காப்பியம். இதில் நால்வகை நிலங்களைக் கூறும் தொல்காப்பியர், இந்நிலங்களுக்குரிய வழிபடு தெய்வங்களையும் கூறுகின்றார்.

'மாயோன்மேய காடுறை உலகமும்
சேயோன்மேய மைவரை உலகமும்
வேந்தன்மேய தீம்புனல் உலகமும்
வருணன்மேய பெருமணல் உலகமும்
முல்லைகுறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"[1]

என்பது தொல்காப்பிய நூற்பா. இதனால் குறிஞ்சி நிலத் தெய்வம் முருகன் என்பது தெரிகிறது. சங்க காலத்திலும் முருகன் குறிஞ்சி நிலத்தெய்வமாகவே போற்றப் பெற்றான். ஆனால் திருமுறை காலத்தில் இந்நிலத்தெய்வப் பாகுபாடு இன்றி, பரம்பொருள் ஒன்றே என்றும், முருகன், விநாயகர், சக்தி போன்ற தெய்வங்கள் சிறு தெய்வங்கள் என்றும் போற்றப் பெற்றனர். பின்னரே முருகன் வழிபாடு விநாயகர் வழிபாடு போன்றவை தனி வழிபாடுகளாயின.

புறத்திணை இயலில் வெட்சித்திணைக்குத் துறைகூற வந்தவிடத்துத் தொல்காப்பியர்,

'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட்டு அயர்ந்த காந்தளும்'' 2

என்ற நூற்பாவின்கண், 'வெறி ஆடுதலை அறியும் சிறப்பினை உடைய வெவ்விய வாயினை உடைய வேலன் வெறியாடிய காந்தள்' என்றார். வெறியாட்டு என்பது குறிஞ்சி நில மக்கள் முருகனை வழிபடும் வழிபாட்டு முறையாகும். காம வேட்கை ஆற்றாளாகிய தலைவி உடல் மெலிய, அதுகண்டு நற்றாய் தெய்வத்தால் ஏற்பட்டது என எண்ணி, வேலனை அழைத்து வெறியாட்டு அடுக்கும் வெறியும், குறிஞ்சி நில மக்கள் வெற்றி வேண்டி ஆடும் வெறியும், வேலன் தானே ஆடும் வெறியும் என வெறியாட்டு மூன்று வகைகளாகக் கூறப்படுகின்றன.

புறத்திணை இயலில் பாடாண்திணைக்கு இலக்கணம் கூற வந்த இடத்து,

'கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே'' 3

என்ற நூற்பாவில், குற்றம்தீர்ந்த சிறப்பினையுடைய கொடிநிலை முதலாகச் சொல்லப்பட்டமுற்பட்ட மூன்றும், பாட்டுடைத் தலைமகனைச் சார்த்தி வருங்காலத்துக் கடவுள் வாழ்த்தொடு பொருந்தி வரும் என விளக்கம் அளிப்பர்.

கொடிநிலை என்றது மன்னனுடைய கொடியின் சிறப்பினைக் கூறுவது. கந்தழி என்பதற்கு நச்சர் ''ஒரு பற்றுக் கோடுமின்றி அருவாகித்தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள்' என்கிறார். இவரே திருமுருகாற்றுப்படையிலும் முருகனைக் கந்தழியென்று கூறி இவ்வாறே பொருளுங் கூறியுள்ளார். இவற்றுக்கு மேற்கோளாக

"உற்ற ஆக்கையில் உறுபொருள் நறுபவர்
எழுதரு நாற்றம்போல் பற்ற லாவதோர் நிலையிலாப்
பரம்பொருள்" 4

என்ற மாணிக்கவாசகர் மொழியையும் எடுத்துக்காட்டு கிறார். இக் கருத்தை நோக்கும் போது முருகன் அக்கால மக்களால் பரம்பொருளாக வழிபட்டமை விளங்குகிறது. வள்ளி என்பது கட்டுவிச்சியர் வேலனொடு கூடி முருகன் புகழைப்பாடிக் கூத்தாடும் வெறியாட்டைக் குறிக்கும்.

திருமுருகாற்றுப்படை:

பத்துப்பாட்டில் இஃது முதல் நூலாகும். நக்கீரரால் பாடப் பெற்றது. முருகன் அருள் பெற்ற ஒருவன் அருள் வேண்டி நின்ற மற்றொருவனிடத்து ஆற்றுப்படுத்தலே திருமுரு காற்றுப்படையாகும். பிற ஆற்றுப்படைகள், ஆற்றுப்படுத் தப் பெறுபவர் பெயரால் அழைக்கப்பெறுகிறது. ஆனால் இந்நூலோ பாட்டுடைத் தலைவனோடு சார்த்தி வழங்கப் படுகிறது.

இந்நூலில் முருகனது திருத்தலங்களாக விளங்கும் ஆறுபடை வீடுகள் சிறப்பாகப் பேசப்படுகின்றன. திருப்பரங் குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினங்குடி, திருவேரகம் குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்பவையே நக்கீரர் கூறும் ஆறுபடை வீடுகள்.

குன்றம் இருக்கும் இடங்களில் எல்லாம் குமரனாகிய முருகன் கோயில் கொண்டு இருப்பான் என்பதை நக்கீரர்,

"குன்றுதோறாடலும் நின்றதன் பண்பே" 5

என்கிறார். முருகன் ஆறுபடைவீடுகளைத் தவிர மற்ற இடங்களில் எழுந்தருளி இருந்ததை,

"ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறி அயர் களனும்

காடுங் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூம் கடம்பும்
மன்றமும் பொதியிலும கந்துஉடை நிலையினும்'' 6

என்னும் இப்பாடல் வரிகள் கூறுகின்றன. வெறியாடும் வேலனின் வழிபாட்டு முறையையும், அடியார் வழிபடும் முறையையும், நூலின் இறுதியில் முருகனை வணங்க வேண்டி முறையினையும் கூறியுள்ளார் நக்கீரர்.

பரிபாடல்:

பரிபாடல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. எழுபது பாடல்களில் இருபத்திரண்டு பாடல்களே கிடைத்துள்ளன. இவற்றில் எட்டுப்பாடல்கள் முருகனைப் பற்றியனவாகும். இந்நூல் முருகனைச் செவ்வேள் என அழைக்கிறது. இந் நூலில் முருகனது வெற்றிச் சிறப்பும், அவதாரச் சிறப்பும், அடியார்கள் வழிபடும் முறையும், திருப்பரங்குன்றத்தின் சிறப்பும் கூறப்பட்டுள்ளன.

இந்நூலில்,

''யாவும் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்'' 7

எனவரும் அடிகள் அரிய கருத்துக்களை உணர்த்துவன வாகும்.

குறுந்தொகை:

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று குறுந்தொகை. இந் நூலுக்குக் கடவுள் வாழ்த்துப்பாடியவர் பெருங்கடுங்கோ அக்கடவுள் வாழ்த்து

''தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேற்

சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே''

என முருகனது திருவடி, திருவடிவம், திருஆடை திருவருள் என்ற செய்திகளைத் தருகின்றன.

நற்றிணை:

சங்க இலக்கியங்களில் தொல்காப்பியர் வெறியெனக் கூறியதைப் பின்பற்றி முருகன் வழிபாட்டை வெறியாட்டு என்றனர். எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான நற்றிணை இதனை,

'வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்''8

எனக் கூறுகிறது.

புறநானூறு:

புறநானூற்றில், பாண்டியன் நன்மாறனை எண்ணியது முடித்தலால் முருகவேலை நீ ஒப்பாய் என நக்கீரனார் வாழ்த்துகிறார். இதனை,

''முருகூஒத் தீயே முன்னியது முடித்தலின்''9

என்ற புறநானூற்று வரி தெளிவுபடுத்துகின்றது. மற்றும் சங்க இலக்கியங்கள் பலவற்றுள்ளும் முருகனைப் பற்றிய செய்திகள் நிரம்ப காணப்படுகின்றன என்பன குறிப்பிடத் தக்கது.

சிலப்பதிகாரம்:

இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதி காரத்தில் இளங்கோவடிகள் முருகனைப் பற்றி நிறை வாகக் கூறியுள்ளார். இந்திரவிழா ஊர் எடுத்த காதையில் புகார் நகரத்திலுள்ள கோயில்களில் விழா நிகழ்ந்ததைக் கூறுமிடத்து ''அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்''10 எனக் கூறுவதால் புகாரில் முருகன் கோயில் இருந்தமையையும், விழா எடுத்தமையையும் அறிய முடிகிறது.

வஞ்சிக் காண்டத்தில் குன்றக் குரவையில் முருகன் கோயில் கொண்டுள்ள திருத்தலங்களையும், அவன் சூர பதுமனை வென்றதனையும், ஆறுமுகமும், ஈராறு கையுமாய் எழுந்தருளிய தோற்றத்தினையும், வேலினையும் இளங்கோவடிகள் எடுத்துரைக்கின்றார்.

குறமகளிர் முருகனை வாழ்த்திக் குரவை பாடு மிடத்துச் சூரபதுமனை வென்ற வேலவனின் வெற்றியை எடுத்து இயம்புகின்றனர்.

"உரையினி மாதராய் உண்கண் சிவப்பப்
புரைதீர் புனல்குடைந் தாடினோ மாயின்
உறவுநீர் மாகொன்ற வேலேந்தி ஏத்திக்
குரவை தொடுத்தொன்று பாடுகம்வா தோழி"11

முருகன் திருச்செந்தூர், திருச்செங்கோடு, ஏரகம் ஆகிய இடங்களை விட்டு நீங்காது, எழுந்தருளி இருப்பவன் என இளங்கோவடிகள் புகழ்ந்துரைக்கின்றார்.

"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே
பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே"12

குறமகளிர் முருகன் கைவேலைப் புழ்ந்து பாடு கின்றனர் மலையினைச் சூடிவரும் அசுரனின் நெஞ்சு பிளக்கக் கிரவுஞ்ச மலையினை அழித்த நெடியவேல், சரவணப் பொய்கையில் தாமரை மலர்ப்படுக்கையில் கார்த்திகை மாதர் அறுவரின் திருமுலைப்பாலினை உண்ட முருகனுடைய அழகிய கைவேல் என முருகனைத் துதிக்கின்றனர்.

நீலப்பறவை மேல் நேரிழை தன்னோடும் ஆலமர் செல்வன் புதல்வன் வரவேண்டும் என வேண்டுகின்றனர். குறமகளும், குறவர்தம் குலமகளுமாகிய வள்ளிநாயகியைப் பரவுகின்றனர்.

ஊர்காண் காதையில், 'கோழிச்சேவல் கொடியோன் கோட்டமும்''[13] என்கிறார். கனாத்திறம் உரைத்த காதையில் ''வேற்கோட்டம்''[14] என்று குறித்துள்ளார். முருகன் திரு உருவத்தை வைத்து வழிபடுவதற்குப் பதிலாக வேலை வைத்து வழிபடும் வழக்கம் இருந்ததை அறிய முடிகிறது. கட்டுரைக்காதையில் ''நெடுவேள் குன்றம் அடி வணங்கி ஏறி''[15] என்பதால் திருச்செங்கோடு அன்றும் முருகன் திருத்தலமாக இருந்தமையை அறியமுடிகிறது.

மணிமேகலை:

மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச்சாத்தனார் முருகன் கோயில் இருந்தமையையும், விழா எடுத்தமையையும்,

''ஆலமர் செல்வன் மகன் விழாக்கால் கோள்''16

என்ற அடிகளால் புலப்படுத்தியுள்ளார். மேலும் ''குருகு பெயர்க் குன்றம் கொன்றோன்' எனவும் உரைக்கின்றார்.

திருமுறைகளில் முருகன்:

திருஞானசம்பந்தர் தம் பதிகங்களில் முருகனைத் தனித்து போற்றவில்லை. சிவனுடன் சேர்த்து மொழிகின்றார். இதனை,

''இளங்குமரன் தனைப்பெற்று''17
''அமர்தரும் குமரவேள்''18
''பெற்றும் உகந்தது கந்தனையே''19

போன்ற தொடர்களால் அறியலாம்.

திருநாவுக்கரசர்

திருஞானசம்பந்தரைப் போன்றே திருநாவுக்கரசரும் சிவனுடன் முருகனை இணைத்தே இயம்பியுள்ளார்.

''கோழிக் கொடியோன் தன் தாதை போலும்''20
''பன்னிரண்டு கையுடைய பிள்ளை தோன்றும்''21
''வள்ளி மணாளற்குத் தாதை''22

போன்றப் பாடல்களால் அறியலாம்.

சுந்தரர்:

ஏழாம் திருமுறையில் சுந்தரர் "மயிலூர்தி முருகவேள் தாதை"[23] "குறவர் மங்கைதன் கேள்வனைப் பெற்ற கோன்"[24] என முருகனைத் தந்தையுடன் இணைத்தே கூறுகின்றார்.

மாணிக்கவாசகர்:

திருவாசகத்தில் மாணிக்கவாசகர், முருகனை திருப்பொற் சுண்ணத்தில், "நல்வேலன் தாதை"[25] எனவும் திருவுந்தியாரில் "குமரன் தன் தாதைக்கே உந்தீபற"[26] எனவும் பாடுகின்றார்.

சேந்தனார்:

ஒன்பதாம் திருமுறையில் திருவிசைப்பா பாடியவர் சேந்தனார். இவர் பாடிய திருவிடைக்கழி பதிகமென்பது முருகன் மீது பாடப் பெற்றதாகும். முருகனிடத்துக் காதல் கொண்ட தலைவியின் நிலையைப் புலப்படுத்துவதாக இப்பதிகத்தை இவர் அமைத்துள்ளார்.

முருகனைத் தமிழ்ச் சங்கத் தலைமைப் புலவன், மலைமகன், வள்ளிமணவாளன், சூரரைக்கொன்ற நெடிய வேலை உடையவன், கோழிக் கொடியோன், மயிலூரும் சுப்பிரமணியன், கங்கைதன் புதல்வன், கணபதியின் தம்பி என்று பலவகையில் புகழ்கின்றார்.

முருகனது பேரழகில் ஈடுபட்ட மகளிர் மடல் தொடங்கிய நிலையும், திருப்பிடவூர் வாழும் மகளிர்க்கு முருகன் அருள் கிடைத்தல் உறுதி என அவள்தாய் கொண்ட நம்பிக்கையும் இப்பதிகத்தில் இடம் பெற்றுள்ளன.

**திருமூலர்:**

திருமூலர் அருளிய திருமந்திரத்தில் சூரபத்மனை வென்ற நிகழ்ச்சியை,

"எம்பெருமான் இறைவாமுறை யோ என்று
வம்பவிழ் வானோர் அசுரன் வலி சொல்ல
அம்பவள மேனி அறுமுகன் போயவர்
தம்பகை கொல்லென்ற தற்பரன்தானே" 27

எனக் கூறுகின்றார். பதினொராம் திருமுறையில் திருமுருகாற்றுப்படையும் ஒரு நூலாக இணைக்கப் பெற்றுள்ளது.

**சேக்கிழார்:**

சேக்கிழார் பெரியபுராணத்தில் "செவ்வேள்" "முருகவேள்"[28] "குன்றமெறிந்த வேலவன்"[29] என்றும் மொழிகின்றார். தடுத்தாட்கொண்ட புராணத்தில்,

"முன்னேஎதிர் வந்து தோன்றும் முருகனோ"30

என மொழிகின்றார். கண்ணப்பர் வரலாற்றில் முருகவழிபாடு பற்றி நிறைவாகப் பேசப்பட்டுள்ளது. தனி அடியாருள் ஒருவர் முருக நாயனார் என்றே குறிக்கப் பெறுவர்.

**கந்தபுராணம்:**

முப்பெரும் புராணங்களில் முருகன் வரலாற்றைச் செப்பும் புராணம் கந்தபுராணமாகும். இதன் ஆசிரியர் கச்சியப்பர். இவர் முருகன் அருள் பெற்ற அடியவர்களுள் ஒருவர். இவருக்கு முருகன் "திகடச் சக்கர செம்முகன் ஐந்துளான்" என்று அடியெடுத்துக் கொடுத்தருளஇந்நூலைப் பாடினார் என்பர். இவர் முருகனின் அருள் வரலாற்றை முழுமையாகக் கூறுகிறார். அவனது திருவவதாரம், மணம் செய்து கொண்டமை, சூரனை அழித்தமை, அவனது வழிபாட்டு முறைகள், விரதங்கள் முதலியன விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

திருப்புகழ்

முருகனின் புகழ்பாடும் நூல்களில் சிறப்பானது திருப் புகழாகும். இதனை இயற்றியவர் அருணகிரிநாதர், முருகன் இவருக்கு "முத்தைத்தரு பத்தித்திரு நகை" என்று அடியெடுத்துக் கொடுக்கப் பாடினார் என்பர்.

முருகன் திருவடி பதியப் பெற்ற சிறப்பினை உடையது திருப்புகழ். முருகனின் ஊர்தியாகிய மயிலிலும், முருகனை வழிபடும் தேவர்களின் தலையிலும் பதிந்த முருகன் திருவடி, திருப்புகழ் ஏட்டிலும் பதிந்து திருப்புகழைப் பெருமைப்படுத்தியது என்பதை

"தாவடி யோட்டு மயிலிலும் தேவர்
தலையிலும் என்
பாவடி ஏட்டிலும் பட்டதன்றோ படி
மாவலிபால்
மூவடி கேட்டன்று முதண்டகூட
முகடு முட்டம்
சேவடி நீட்டும் பெருமான் முருகன்தன்
சிற்றடியே" 31

என்னும் கந்தரலங்காரச் செய்யுளில் அருணகிரியாரே இச்செய்திகளைக் கூறுகின்றார்.

இந்நூலைக் கற்பவரும், கேட்பவரும் பெறும் உறுதி கள் பலவாகும் என அருணகிரியாரே கூறுகின்றார்.

"விரித்து அருணகிரி நாதன் உரைத்த தமிழ்எனும் மாலை
மிகுத்த பலமுடன் ஓத மகிழ்வோனே" 32

இத்தொடர்கள் திருப்புகழைக் கற்பவருக்கு மிகுந்த பயன் கள் வரும் என்பதை வலியுறுத்துகின்றன.

'நினைத்ததும் அளிக்கும் மனத்தையும் உருக்கும் நிறைப்புகழ்" 33

என திருப்புகழானது வேண்டுவார்க்கு வேண்டிய வரத்தை நல்கி மனத்தை உருக்கும் ஆற்றல் வாய்ந்தது.

உலகியல் வாழ்க்கையில் துன்புறும் மக்களுக்கு முருகன் பெருமையை உணர்த்தி, முருகன் திருவருளால் பிறவித் துன்பத்திலிருந்து உயர்வு பெறுவதற்கான நெறியினை வகுத்துக் கூறுவதே திருப்புகழின் இன்றியமையாத பொருளாக அமைவதால் உன்னதமான பொருட் சிறப்புடையதாகத் திருப்புகழ் விளங்குகிறது.

சிவபிரானுக்குத் தேவாரம் சிறந்த புகழ் நூல். அங்ஙனமே முருகனுக்குச் சிறந்த புகழ் நூல் திருப்புகழ் என்று செங்கல்வராய பிள்ளை கூறும் கருத்து[34] சிறப்புடையது.

கல்லில் நார் உரிப்பதுபோல் கல்போன்ற நெஞ்சைக் கூட கனியச் செய்யும் கருணைத்திறம் கொண்டவன் கந்தவேள்

'கன்னார் உடுத்தஎன் மன்னா எனக்குநல்
கர்ணா மிர்தப்பதம் தந்தகோவே
கல்லார் மனத்துடன் நில்லா மனத்தவ''35

என முருகனின் அருள்மொழி தன் கல்நெஞ்சையும் கனியச் செய்து விட்டது என்கிறார் அருணகிரியார்.

இவர் திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தநுபூதி, வேல்விருத்தம், மயில்விருத்தம், சேவல் விருத்தம், திருவெழுஉற்றிருக்கை ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

கந்தர் அந்தாதி:

அருணகிரியார் முருகனுக்கு அந்தாதி இல்லாத குறையைப் போக்க இந்நூலை இயற்றியுள்ளார். இந்நூலை முருகனுக்குரிய அகப்பொருள் நூல் என்று கூறுவர்.

கந்தரலங்காரம்:

கந்தரலங்காரம் முருகனது அலங்காரங்களைக் கூறுவது, முருகனது பாதாதிகேச வருணனைகள் சிறப்பாக அமைந்

துள்ளன. மற்றும் ஊர்தி, படை, கொடி, நாம விசேடம் முதலியன விளக்கமாக உள்ளன.

'நாளென் செய்யும்வினை தானென்
செயும்எனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென்
செயுங்கும ரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்
னேவந்து தோன்றிடினே'' 36

எனவரும் பாடலின் சிறப்பினைக் கருதி முருகன் அடியார்கள் இதனைப் பாராயண நூலாகக் கொண்டுள்ளனர்.

கந்தரனுபூதி:

திருமூலர் ஆவின் உடலில் புகுந்து திருமந்திரம் பாடியது போன்று அருணகிரியாரும் கிளியின் உடலில் புகுந்து பின்பு கந்தரனுபூதி பாடினார் என்பர். கந்தரனுபூதி பற்றி தாயுமானவர்,

''கந்தரநு பூதிபெற்றுக் கந்தரனு பூதிசொன்ன
எந்தை அருள் நாடி இருக்குநாள் எந்நாளோ''37

என்று புகழ்கின்றார்.

திருவகுப்பு:

முருகனது பதினெட்டு திருவகுப்புகளை இந்நூலில் கூறுகின்றார்.

கந்தர் கலிவெண்பா:

இந்நூல் குமரகுருபரரின் பிரபந்தங்களில் தலையாயது. இவர் பிள்ளைப் பருவத்தே ஊமையாக இருந்தார். இவரது பெற்றோர் திருச்செந்தூர் முருகனை வேண்ட ஊமை நீங்கப்பெற்றார். முருகன் அருளால் இந்நூலைப் பாடினார். இந்நூல் முருகன் இயல்புகள், முருகன் உயிர்களுக்குச்

செய்யும் கருணை, அவனது கேசாதிபாத வருணனை, இறைமைத் தன்மை, தசாங்க சிறப்புகள், கந்தபுராண வரலாறு, உயிர்கள் பெறவேண்டிய பேறுகள் முதலியன வற்றை ஒருங்கே குழைத்துத் தரும் புனித நூலாக விளங்கு கிறது.

முத்துக்குமாரசுவாமிப் பிள்ளைத்தமிழ்

பிள்ளைத் தமிழ் நூல்களில் சிறப்பிடம் பெறும் இந்நூல் வைத்தீஸ்வரன் கோயிலில் எழுந்தருளியுள்ள முருகன் மீது பாடப்பெற்றதாகும். இத்தலத்தில் முருகன் முத்துக் குமாரசுவாமி எனத் திருநாமம் பெற்றதால் இந்நூலை அப்பெயராலேயே அழைக்கலாயினர்

'விழியாக முன்னின்று தண்ணளி சுரந்தவர்கள்
வேண்டிய வரங்கொடுப்பான்
மெய்கண்ட தெய்வம்இத் தெய்வமல் லாற்புவியில்
வேறில்லை யென் றுணர்தியால்''[38]

என முருகனைக் கண்கண்ட தெய்வம் எனப் பேசுகிறார் குமரகுருபரர்.

குமரேசர் சதகம்:

திருப்புல் வயல் என்ற தலத்தில் எழுந்தருளியுள்ள முருகன் மீது பாடப்பெற்றது இச்சதக நூல். இந்நூலின் இறுதியில் 'பன்னரிய புல்வயலில் வால குமரேசன் மேல் வரிந்து குருபாததாசன்''[39] என வருவதால் இந்நூல் ஆசிரியர் குருபாததாசர் என அறிய முடிகிறது.

இவர் முருகன் ஆறுதலையுடன் அவதரித்தது, நான் முகனைச் சிறையில் அடைத்தது, 'பிரணவ மந்திரம் உப தேசித்தது, சூரபதுமனை அழித்தது ஆகிய செய்திகளை அழகுற எடுத்தியம்புகிறார்.

பழனியாண்டவர் மயில் விடுதூது:

பழனியாண்டவருக்கு மயிலைத் தூது விடுவதாக அமைந் தது. இதன் ஆசிரியர் நடேசக் கவுண்டராவர். பழனிமலைச்

சிறப்பு, முருகன் படை வீடுகள், அடியார் வருகை, மெய்க் கோலம், உலாக்காட்சி, திருவிளையாடல்கள், மயிலின் பெருமை முதலியன இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

திருஇலஞ்சி முருகன் உலா:

இலஞ்சித் தலத்து முருகன் மீது மேலகரம் பண்டாரக் கவிராயர் இந்நூலைப் பாடியுள்ளார். இலஞ்சி முருகன் திருவீதி உலாவர, அவன் பேரழகைக் கண்டு ஏழு பருவத்து மகளிர் மயங்கியதாகப் பாடப் பெற்றது. அகத்தியர் தென்பால் வருதல், அவர் இலஞ்சியில் சிவபெருமானைப் பிரதிஷ்டை செய்து பூசித்தல், முருகனின் பெருமை, திருவிழா, ஆறுநாளும் கொண்டருளும் திருக்கோலங்கள், அபிடேகம், உலாக்காட்சி, பேதை முதல் பேரிளம் பெண்வரை முருகனின் எழில் கண்டு மயங்குதல் ஆகியன இடம் பெற்றுள்ளன,

திருப்போரூர்ச் சந்நிதி முறை:

திரு சிதம்பர சுவாமிகளால் அருளிச் செய்யப்பெற்ற இந்நூலின்கண் பிள்ளைத் தமிழ் முதலாக அடைக் கலப்பத்து ஈறாகப் பதினெட்டுத் தலைப்புகளின் கீழ் பாடல்கள் அமைந்துள்ளன.

திரு சிதம்பர அடிகளார் திருப்போரூர் முருகனுக்குக் கோயில் எழுப்பியதோடு அமையாது, அவனைப் புகழ்ந்து தெய்வப்பாமாலைகளைப் புனைந்துள்ளார். அத்தொகுப்பே இந்நூல்.

ஸ்ரீமத் குமாரசுவாமியம்:

பாம்பன் சுவாமிகளால் இயற்றப் பெற்றது. இந்நூல் இவர் அருளிய நூல்களை ஆறுமண்டலங்களாகப் பிரித்துள் ளனர் அவற்றுள் இந்நூல் குமாரசுவாமியம் ஆறாவது மண்டலமாகும், இந்நூல் ஐந்து பகுதிகளைக் கொண்டது.

திருவிளையாடற் காண்டம், முருகன் அவதாரம் முதல் வள்ளி தேவி திருமணத்தின் பின்னர் கந்தகிரிக்கு எழுந்தருளுதல் வரையிலுள்ள சரித்திரத்தைக் கூறுவது. சேத்திர காண்டத்தில் முருகன் எழுந்தருளி இருக்கும் தலங்களுள் சென்னை, சண்முக ஞானபுரம் சண்பகாடவி, திருவொற்றியூர், மயிலை, திருவான்மியூர், திருக்கழுக்குன்றம், யுத்தபுரி, பாடி, பாக்கம் என்ற பத்து தலங்களைப் பாடியருளினார், கடாவிடைக் காண்டம், இருவர் தம்முன் வினவி விடுக்கும் பேச்சு வாயிலாக முருகன் அருளை நயத் தோடு விளக்குவது. வேட்டைக் காண்டம், முருகனை பெண்பாலார், மைந்தனாகவும், நாயகனாகவும் பாவனை செய்து அவன்பால் பெருக்கும் வேட்கையை வெளியிடுவன பலதிறப்பொருட்காண்டம், தன் பெயருக்கேற்பப் பல்வேறு பொருள்களைப் பற்றிக் கூறுவது. முதல்வனையும் அவனடியவரையும், அருட்திறத்தையும் நீதி முதலியன வற்றையும் குறித்துப் பேசுவது.

**சண்முகக் கவசம்:**

இந்நூலும் பாம்பன் சுவாமிகளால் அருளப் பெற்ற தாகும். நோயால் அவதியுறும் பொழுதும், துன்பச் சூழலில் சிக்கித் தவிக்கும் பொழுதும், நித்திரை செய்யும் பொழு தும், மரணகாலத்திலும். இதனைப் பாராயணம் செய் வோமானால் இறைவன் அருள் நின்று பாதுகாக்கும். என்ற நம்பிக்கை முருக அடியார்களுக்கு உண்டு.

**கந்தசஷ்டிக் கவசம்:**

இந்நூல் தேவராய சுவாமிகளால் அருளப்பெற்றது. சஷ்டிவிரதத்தின் பொழுது அடியார்கள் இதனைப் பாராயணம் செய்வர்.

**கந்தபுராணச் சுருக்கம்:**

தருமையாதீனம் ஸ்ரீசம்பந்த சரணாலய சுவாமிகளால் அருளிச் செய்யப்பெற்ற நூல். அடியார்க்கு ஒருபாராயண

நூலாகும். கந்தபுராணத்தில் இடம் பெற்றுள்ள முருகன் வரலாற்றைச் சுருக்கமாகக் கொண்டது இந்நூல்.

தெய்வமணிமாலை:

இஃது இராமலிங்க சுவாமிகளால் பாடப்பெற்றது. சென்னைக்கு அண்மையிலுள்ள கந்தக்கோட்டத்துஉறையும் முருகனைச் சமரச சுத்த சன்மார்க்க நெறிதந்து ஆட் கொள்ள வேண்டுகிறார்.

இங்ஙனம் முருகன் மேல் பாடப்பெற்ற அருள் நூல்களும், தலப்பாடல்களும் மிகப்பலவாகும். அறிமுகத் திற்காக இங்கே ஒரு சில நூல்கள் மட்டும் எடுத்துக் காட்டப்பெற்றன. முருகன் அருள் பெற்ற அடியவர்களும் அன்பர்களும் மிகப்பலர். முருக வழிபாட்டைக் கௌமாரம் என அறுசமயங்களுள் ஒன்றாக அடக்குவர் சங்கரர். முருகநெறி போற்றுவார் கண்ட திருமடங்கள் கௌமார மடாலயங்கள் எனப்பெற்றன. தமிழகத்தில் தமிழ்க் கடவுளாகிய முருகன் எழுந்தருளியுள்ள தலங்கள் மிகப் பலவாகும். அவற்றுள் ஒன்று மணவாளநல்லூர். இங்கே கோயில் கொண்டு அருள்வழங்கும் முருகப்பெருமான் 'அருள்மிகு கொளஞ்சியப்பர்' என வழங்கப் பெறுவர். அப்பெருமானின் அருள்வரலாறு காணும் நோக்கில் செந்தமிழோடு அப்பெருமானுக்கிருந்த இனிய தொடர்பை யும் நினைவு கூர்தல் பொருத்தமுடையதேயாகும்.

## குறிப்பு விளக்கம்


1. தொல் - பொருள், நூற்பா - 5
2. மேற்படி நூல் நூற்பா - 60
3. மேற்படி நூல் நூற்பா - 88
4. பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரை-ப-79
5. திருமுருகாற்றுப்படை வரி - 217
6. மேற்படி நூல் வரி 220 - 226
7. பரிபாடல் வரி - 76-78
8. நற்றிணை பா - 34
9. புறநானூறு பா - 56
10. சிலப்பதிகாரம் புகார்க்காண்டம் - வரி - 170
11. மேற்படி நூல் வஞ்சிக்காண்டம் - பா - 6
12. மேற்படி நூல் வஞ்சிக்காண்டம் - பா - 7
13. மேற்படி நூல் மதுரைக்காண்டம் - வரி - 10
14. மேற்படி நூல் புகார்க்காண்டம் - வரி - 11
15. மேற்படி நூல் மதுரைக்காண்டம் - வரி - 190
16. மணிமேகலை மலர்வனம்புக்காதை - வரி -144
17. திருமுறை - 2, பதிகம் - 73, பா - 1
18. திருமுறை - 3, பதிகம் - 35, பா - 6
19. திருமுறை - 3, பதிகம் - 113, பா - 1
20. திருமுறை - 6, பதிகம் - 89, பா - 2
21. திருமுறை - 6, பதிகம் - 18, பா - 4
22. திருமுறை - 6, பதிகம் - 23, பா - 4
23. திருமுறை - 7, பதிகம் - 38, பா - 8
24. திருமுறை - 7, பதிகம் - 68, பா - 7

25. திருவாசகம், திருப்பொற்சுண்ணம் - பா - 3
26. மேற்படி நூல் திருவுந்தியார் - பா - 17
27. திருமந்திரம் - பா - 512
28. பெரியபுராணம் - பா - 290
29. மேற்படி நூல் - பா - 659
30. மேற்படி நூல்
31. கந்தரலங்காரம் - பா - 15
32. திருப்புகழ்
33. மேற்படி நூல்
34. மேற்படி நூல்
35. மேற்படி நூல்
36. கந்தரலங்காரம் - பா - 38
37. தாயுமானவர் பாடல்கள்
38 முத்துகுமாரசுவாமிப் பிள்ளைத்தமிழ் - பா - 6
39. குமரேசர் சதகம் - பா - 100

கொளஞ்சியப்பர் திருக்கோயில்




அலங்கார நுழைவாயில்

## இயல் : இரண்டு

# மணவாள நல்லூர் தலவரலாறு

**அழகிய சிற்றூர்:**

அருள்மிகு கொளஞ்சியப்பர் கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து அருள் வழங்கும் திருத்தலம் மணவாள நல்லூர். நன்செய்வளமும், புன்செய்வளமும் கொஞ்சிக் குலவும் அழகிய சிற்றூர் இது. தமிழ்நாட்டின் இன்றைய தென்னாற்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டத்தில் இத்தலம் அமைந்துள்ளது.

**ஒரு சிறு பயணம்:**

விருத்தாசலம் பேருந்து நிலையத்தில் இறங்கி, இந்நகரின் நடுநாயகமாக ஓடும் மணிமுத்தாற்றுப்பாலத்தைக் கடந்து ஆற்றின் தென்கரைக்கு வந்தால் கம்பீரமான நான்கு இராஜகோபுரங்களை நாம் தரிசிக்கலாம்'. அவை விருத்த காசி என்று போற்றப்பெறும் அருள்மிகு விருத்தகிரிநாதர் திருக்கோயிலாகும். அதனை நெஞ்சில் நினைந்து, கைகூப் பித் தொழுது, வலமாக வந்து, சேலம் நோக்கி விரிந்து கிடக்கும் நெடுஞ்சாலையில் மேற்குத் திசையில் பயணம் தொடர வேண்டும். அரை கிலோமீட்டர் சென்றதும் விருத்தாசலம்- திருச்சிராப்பள்ளி புகை வண்டிப்பாதை குறுக்கிடும். அருகில் விருத்தாசலம் நகர் புகைவண்டி நிலை யம் இருக்கும். அதனைக் கடந்து, மேற்கு நோக்கி ஒரு கிலோ மீட்டர் சென்றால், சாலையின் இடப்பக்கம் கிழக்கு நோக்கிய சந்நிதியில் அருள்மிகு கொளஞ்சியப்பர் கோயில் கம்பீரமாக விளங்குவதைக் கண்டு மகிழலாம். இத்தலம் அமைந்த பகுதியே 'மணவாளநல்லூர்' என போற்றப் பெறுவது.

**எங்கிருந்தும் வரலாம்:**

விருத்தாசலம், சென்னை திருச்சிராப்பள்ளி புகை வண்டி குறுக்குப்பாதையில் அமைந்துள்ள ஒரு சந்திப்பு

ஆகும். கடலூர்-சேலம் புகைவண்டிப் பாதையும் இங்கே சந்திக்கின்றன. எனவே, விருத்தாசலத்திற்கு சென்னை, திருச்சிராப்பள்ளி, சேலம், கூடலூர் என்ற நான்கு நகரங்களிலிருந்தும் புகை வண்டி வசதி உண்டு பெரும்பாலான விரைவு வண்டிகள் விருத்தாசலத்தில் நிற்கும். பயணிகள் வண்டியில் வந்தால் விருத்தாசலம் நகர் புகைவண்டி நிலையத்திலும் இறங்கலாம். விருத்தாசலம் புகைவண்டி நிலையத்தில் எல்லா விரைவு வண்டிகளிலும் இருக்கை, மற்றும் படுக்கை முன்பதிவு செய்து கொள்ளும் ஒதுக்கீடு வசதிகளும் உண்டு.

பேருந்துத் தடங்கள்:

விருத்தாசலத்திற்கு வருகைதர தற்போது பேருந்து வசதிகள் மிகுதியாக அமைந்துள்ளன. சிதம்பரம், கடலூர், பண்ருட்டி, உளுந்தூர்ப்பேட்டை, சேலம், ஜெயங்கொண்டம், திருச்சிராப்பள்ளி முதலிய நகரங்களிலிருந்து அடிக்கடி விருத்தாசலத்திற்கு நிறைவாகப் பேருந்துகள் வந்து செல்கின்றன. நெடுந்தூர நகரங்களிலிருந்து திருவள்ளுவர் விரைவுப் பேருந்து வசதிகளும் இந்நகருக்கு உண்டு. இரவு பகல் எந்நேரமும் இந்நகருக்குப் பேருந்துகள் இயக்கப் படுகின்றன. விருத்தாசலத்திலிருந்து மணவாளநல்லூர் சென்றடைய நகரப்பேருந்துகளும் உள்ளன. மேலும் குதிரை வண்டிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள் வசதியும் உண்டு. கருப்பு வைரம் என்று போற்றப் பெறும் பழுப்பு நிலக்கரி நகரமாகிய நெய்வேலி விருத்தாசலத்திற்கு அருகில் உள்ள பெரிய தொழில் மையமாகும்.

நடுநாடு:

இன்றைய தென்னாற்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியை உள்ளடக்கியதாகப் பண்டைக் காலத்தில் நடுநாடு விளங்கியது. சோழநாட்டிற்கும் பல்லவநாட்டிற்கும் இடையில் அமைந்த காரணத்தால் இதனை நடுநாடு

எனச் சான்றோர் குறித்தனர். கொள்ளிட நதிக்கு வடபாலும், தென்பெண்ணை ஆற்றுக்குத் தென்பாலும் வங்கக்கடலுக்கு மேல்பாலும் மேற்கே திருவண்ணாமலை வரையிலும் நீண்டு அகன்று விரிந்த நிலப்பரப்பே நடுநாடு ஆகும். சோழர்களும், பல்லவர்களும், தத்தம் படைகளுடன் போர் நிகழ்த்தப் பாடி வீடுகள் அமைத்துத் தங்கிய காரணத்தால் அவர்தம் பார்முனைப் பகுதி என்ற பொருளில் நடுநாட்டின் ஒரு பகுதியைத் திருமுனைப்பாடி நாடு என்றும் குறிப்பர். வரலாற்றுச் சிறப்பும் - சைவசயமப் பெருமித நிகழ்வுகளும் நிறைந்த பகுதி நடுநாடு ஆகும்.

வரலாற்றுக் காலத்தில்:

முதற் குலோத்துங்க சோழன் ஆட்சிக்காலத்தில் இன்றைய விருத்தாசலமும், மணவாளநல்லூரும், விருதராஜ பயங்கர வளநாட்டு, மேற்காநாட்டு, இருங்கோளப்பாடியின் ஒரு பகுதியான மருவூர்க்கூற்றத்தில் அமைந்திருந்தன என்பதை விருத்தாசலம் திருக்கோயில் கல்வெட்டு ஒன்று குறிக்கிறது. நடுநாட்டில் மூவர் தேவாரப்பாடல் பெற்ற சிவதலங்கள் இருபத்திரண்டு. அவற்றுள் ஒன்று திருமுதுகுன்றம் எனக் குறிக்கப்பெறும் விருத்தாசலம். மணவாளநல்லூரைச் சுற்றிச் சூழ்ந்து கோபர்வதபுரம், திரு எருக்கத்தம்புலியூர், திருக்கூடலையாற்றூர். திருத்தூங்கானையிடம் முதலிய திருத்தலங்கள் அமைந்துள்ளன.

முத்தித்தலம்:

விருத்தாசலத்தின் பழம்பெயர் திருமுதுகுன்றம் என்பது. திருமுதுகுன்றம் என்பதன் வடமொழியாக்கமே விருத்தாசலம் என வழங்கலாயிற்று. அதுவே இன்று வழக்கில் நிலவுகிறது. மணிமுத்தாற்றின் தென்கரையில் அமைந்துள்ள தொன்மையான திருக்கோயில் அருள்மிகு

விருத்தகிரீசுவரர் திருக்கோயில். திருமுதுகுன்றநாதர் என்றும், பழமலைநாதர் என்றும் இறைவன் வழங்கப்பெறுவர். அம்மை அருள்மிகு விருத்தாம்பிகை எனும் பெயரிய பெரியநாயகி. அருள்மிகு. பாலாம்பிகை சந்நிதியும் இங்கே உண்டு. தருமை ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீ குரு ஞானசம்பந்தர், ஒரு வெண்பாவில் சைவர்களின் முத்தித்தலங்கள் இவை எனக் கூறியுள்ளார்

"தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் நெல்லைகளர்
காஞ்சிகழுக் குன்றம்மறைக் காடுஅருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்"

இதில் முதுகுன்றமாகிய இத்தலமும் முத்தித்தலங்களுள் ஒன்றாகக் குறிக்கப்பட்டுள்ளது.

**அருளாளர் அவதாரம்:**

திருமுதுகுன்றத்தை உள்ளடக்கிய நடுநாடு சைவசமயச் சான்றோர் பலர் திருவவதாரம் செய்த பெருமை மிக்கது. அறந்தரு நாவுக்கரசரும், ஆலாலசுந்தரரும் பிறந்தருளியது. சைவ சந்தானாசாரியர்களாகிய மெய்கண்டாரும், அருணந்தி சிவமும் அவதரித்த அற்புதமண் இது. இங்கே பிறந்து, வாழ்ந்து, செந்தமிழும் சிவநெறியும் வளர்த்த காவலர்களும் அருளாளர்களும் எண்ணிலர். இப்பகுதியில் அமைந்துள்ள திருமுதுகுன்றம் மூவர் முதலிகள் அருளிய பதினொரு தேவாரத் திருப்பதிகங்களைப் பெற்றது. அருணகிரிநாதர், ஞானக்கூத்தர், குமாரதேவர், குருநமசிவாயர், சிவப்பிரகாசர், இராமலிங்கசுவாமிகள், சொக்கலிங்க அடிகள் முதலிய பல அருளாளர்கள் இத்தலத்திற்கு ஞான நூல்கள் அருளிச்செய்துள்ளனர்.

**திருமுதுகுன்றம்:**

நடுநாட்டுச்சிவதலங்களுள் ஒன்பதாவதாக விளங்கும் திருமுதுகுன்றம் பல்வேறு பெருமை மிக்கது. உலகப்படைப்

பில் முதலில் தோன்றிய மலை இங்கே இருந்தமையின் இது பழமலை என அழைக்கப்பெற்றது. காசியை ஒப்ப இங்கே இறந்தாருக்கு வீடுபேறு அருளும் சிறப்புமிக்கது. இத்தலத்தில் இறந்தவர்களை இறைவன் தம் மடிமீது இருத்தி ஐந்தெழுத்து உபதேசம்செய்ய, அம்மை தம் முந்தானையால் விசிறிப் பிறவிகளால் உயிர்களுக்கு ஏற்பட்ட களைப்பை நீக்க, முடிவில் இருவரும் அவ்வுயிர்களுக்கு முத்திப்பேறு அளித்தருளுவர் என்பது தலபுராணம் கூறுவது. சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு இறைவன் இங்கே பன்னீராயிரம் பொன்வழங்க, அவர் அதனை மணிமுத்தாற்றில் இட்டுத் திருவாரூர்க் கமலாலயக் குளத்தில் எடுத்துக்கொள்ள அருள்பாலித்த சிறப்பினது இத்தலம். திருமால், பிரமன், அகத்தியர், விதர்க்கணர், விபசித்து, கலிங்கன், சுவேதன், முதலியோர் பூசித்துப் பேறு பெற்றது திருமுதுகுன்றம்.

நாற்றிசைக் கோயில்கள்:

திருமுதுகுன்றத்தின் நான்கு திசைகளிலும் மக்கள் விரும்பிப் போற்றி வழிபடும் நான்கு திருக்கோயில்கள் அமைந்துள்ளன.

ஒன்று விருத்தாசலத்திற்குத் தெற்கே சுமார் மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. அதனை வேடப்பர் கோயில் என்பர். கலியுகக் கண்கண்ட தெய்வமாக விளங்கும் வேடப்பர் பல்லாயிரம் மக்களால் பயபக்தியோடு வணங்கப்பெறுவர். வெள்ளிக்கிழமைகளில் இங்கே ஆயிரக் கணக்கில் மக்கள் வந்து வழிபட்டுச்செல்லுகின்றனர்.

இரண்டாவது, விருத்தாசலத்திற்கு மேற்கே மூன்று கிலோமீட்டர் தூரத்தில், நெடுஞ்சாலையில் மணவாள நல்லூரில் கோயில் கொண்டு விளங்கும் தம் கொளஞ்சியப்பர் திருக்கோயில்.

மூன்றாவது, விருத்தாசலத்திற்கு வடக்கே இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ள வெண்மலையப்பர் திருக்கோயில். இவர் உழவர்களின் காவல் தெய்வமாகக் கருதி வழிபடப்பெறுகிறார்.

நான்காவது, விருத்தாசலத்திற்குக் கிழக்கே மூன்று கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ள கரும்பாயிரம் கொண்ட அப்பர் கோயில். வேண்டி வழிபடுபவர்களுக்கு வேண்டிய பலனை வற்றாது வழங்கும் அருளினர் கரும் பாயிரம் கொண்ட அப்பர் என்பர்.

மணவாளநல்லூர்:

"இவ்வாறான பெருமிதம் மிக்க நடுநாட்டில் செந் தமிழும் சிவ நெறியும் செழித்த திரு மண்ணில் பழம்பெரும் சிவதலமாகிய விருத்தாசலத்தை அடுத்த புண்ணிய பூமி யாகத் திகழ்கின்ற மணவாளநல்லூர், செந்தமிழ் முருகன், அருள்மிகு கொளஞ்சியப்பராக எழுந்தருளியிருந்து அருள் பாலிக்கும் பெருமை பெற்றது. மலைமீது குடி கொள்ளும் குறிஞ்சி நிலப் பெருமான், இயற்கைமலை இல்லை என் றாலும், தன்தந்தை பழமலை இருப்பதனால், இங்கே குடியேற விரும்பினான் போலும்! பழமலைக்குமரன் கொளஞ்சியப்பனாகக் கோயில் கொண்ட அருள் வரலாறு ஒரு நூறு ஆண்டுகளுக்கு உட்பட்ட வரலாறு. அன்பும் ஆசாரமும், பக்தியும், பண்பாடும் மிக்க மக்கள் வாழும் ஊரே இறைவன் விரும்பி உறையும் தலமாகும். மணவாள நல்லூர் மக்கள் செய்த புண்ணியப்பயன், குமரப்பெருமான் திருவடிகளிலே சென்று சேர்ந்திருக்க வேண்டும். அம்மக் களின் அன்பை நுகர்ந்து, அவர்களுக்கு அளப்பரிய நலம் சேர்க்க விழைந்த முருகப்பெருமான், தந்தை பழமலை யப்பர் தாள் நிழலிலே தங்கும் விருப்போடு மணவாள நல்லூர் குடிபுகுந்து தன்னை வெளிப் படுத்திக்கொண்ட அருள் வரலாறு மெய்சிலிர்க்க வைப்பது. அந்த உன்னத அருள் வரலாற்றை அவன் அருள்வழி நின்று அடுத் தடுத்துக் காண்போம்.

அருள்மிகு கொளஞ்சியப்பருக்குப்




பசு பாலாபிடேகம் செய்து வழிபட்ட காட்சி

## இயல் : மூன்று

# அருள்மிகு கொளஞ்சியப்பர்

பரமகருணையாளன் :

மணவாளநல்லூரில் கோயில் கொண்டு அருள் பாலித்து வரும் அருள்மிகு கொளஞ்சியப்பர் அருள் வரலாறு மெய்சிலிர்க்க வைக்கும் அற்புதங்கள் நிறைந்தது. ஐயன் திருவிளையாடல்கள் நெஞ்சம் குளிர்விக்கும் நீர்மை மிக்கது. அவன் அருளிப்பாடுகள் அடியவர்க்கு வற்றாத ஜீவநதி போல் வளம் சேர்ப்பது. சிவபிரான், ஐந்து முகங்களோடு, அறிஞரானோர் உணர்ந்து போற்றும் அதோ முகத்தையும் கொண்டு அறுமுகப்பண்ணவனை ஆக்கி அளித்தனன் என்பர் கச்சியப்பர். ஆறுமுகங்களாலும் அன்பர்களுக்கு அருளைவாரி வழங்கும் முருகப்பெருமான், செந்தமிழால் வைதாரையும் வாழவைப்பவன், பாதகம் செய்தார்க்கும் பரிசு நல்கும் பரம கருணையாளன். அடியார்கள் இல்லம் தோறும் தாமே எழுந்தருளி இன்பம் சேர்க்கும் எளிவந்த பிரான். அத்தகு கருணைவள்ளல் மணவாளநல்லூரில் கோயில் கொண்டது, அப்பகுதியில் வாழும் மக்களின் பால் கொண்ட அளப்பரிய கருணையால் அன்றி வேறன்று.

விருத்தாசலத் தலபுராணம்:

தமிழகத்தில் கி.பி. 16ஆம் நூற்றாண்டிற்குப்பின் தலபுராணங்கள் மிகுதியாகத் தோன்றின. இவற்றை ஆக்கி அளித்தோர் பலரும் அவ்வத்தலங்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகளையும், காலகாலமாக மக்கள் வழக்கில் பேசப் பெற்றுவரும் ஐதிகங்களையும், செவிவழிச் செய்திகளையும் ஒன்று திரட்டிப் பதிவு செய்து சமயத்துறைக்கு அருந் தொண்டாற்றினர். இத்தகு தல புராணங்கள், இருக்கும் இடத்தை விட்டு, இல்லாத இடம் தேடி அலையும் மக்களை நெறிப்படுத்த உதவின. இவை எடுத்துக் கொண்ட

தலத்தை மட்டும் சிறப்பிப்பதோடு அமையாது சுற்றுப்புறச் சிற்றூர்களில் வழங்கும் ஐதிகங்களையும் பதிவு செய்து போந்தன. இவ்வாறு கி.பி. 16ஆம் நூற்றாண்டில் சிவன் பாக்கம் ஞானக்கூத்தசுவாமிகளால் எழுதப்பெற்ற விருத்தாசலத் தலபுராணம் 18 சருக்கங்களில் 435 திருவிருத்தங்களால் அமைந்துள்ளது. பரிப்பாக்கம் முனியப்ப முதலியார் உரையுடன், சென்னை சகலகலா நிலைய அச்சுக்கூடத்தார் கி.பி. 1890 இல் பதிப்பித்து வெளியிட்ட இத்தலபுராணத்தில் விரிவான பல வரலாறுகள் பேசப்பெற்றுள்ளன. ஆயினும் மணவாளநல்லூர் பற்றியோ, கொளஞ்சியப்பர் பற்றியோ ஒரு சிறு குறிப்பும் இதில் இல்லை.

சித்தர் வாழ்ந்த பூமி:

கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் நிறைவுப்பகுதிவரை தோன்றிய பழமையான தமிழ் இலக்கியங்களிலோ, உரை நடைநூல்களிலோ மணவாளநல்லூரைப் பற்றிய குறிப்புக்கள் ஏதும் கிடைத்திலது. கண்ணாடியில் கந்தப்பெருமானைத் தரிசித்து, அவனுக்குத் தெய்வமணி மாலை சூட்டிய வடலூர் வள்ளலார் கடந்த நூற்றாண்டில் இவ்வூருக்கு வருகைதந்தார் என்றும், அதற்குப் பின்னரே இவ்வூர் விளக்கம் பெறலாயிற்று என்றும் இப்பகுதியில் வாழும் முதியவர்கள் வாயிலாக ஒரு செய்தி அறியப்பட்டது. வள்ளலார் வரலாற்றில் இது பற்றிக் குறிப்பேதும் இல்லை. ஆயின் ஞானிகளும், சித்தர்களும் அடிவைத்த மண்ணில் இறைவன் அருள்வெள்ளம் பெருக்கெடுத்துப்பாயும் என்பது வரலாற்று உண்மை. எவ்வகையிலேனும் ஒரு தலம் சிறப்புப் பெற்றுள்ளது என்றால், யாரேனும் ஒரு அருளாளர் வாழ்ந்து, தவமியற்றிய சிறப்பு அதனோடு தொடர்பு கொண்டே இருக்கும். இன்று விளங்காது போயினும் என்றேனும் ஒரு நாள் அந்த உண்மை வெளிப்பட்டே தீரும்.

### அச்சம் தரும் காடு:

சுமார் அறுபது அல்லது எழுபது ஆண்டுகளுக்கு முன் தற்போது கொளஞ்சியப்பர் கோயில் கொண்டுள்ள நெடுஞ் சாலையை ஒட்டிய மணவாளநல்லூர்ப் பகுதி காட்டுச் செடிகளும், மரங்களும் அடர்ந்து வனப்பகுதியாகவே விளங்கியிருந்துள்ளது. இருட்டிய பிறகு அப்பகுதிக்குச் செல்வதற்கே மக்கள் அஞ்சுவர். பகலில் மாடு மேய்க்கும் இடமாகவே இப்பகுதி விளங்கியுள்ளது. விருத்தாசலம்-சேலம் பேருந்துத்தடத்தில் இன்று கோயில் அமைந்திருக் கும் இடத்திற்குத் தெற்கே இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில்தான் மணவாளநல்லூரின் மக்கள் வாழும் பகுதி அமைந்துள்ளது. அவ்வூரின் வடக்கில் கிராமத்தின் எல்லையாகச் சாலை ஓரம் அமைந்த காட்டுப்பகுதியி லிருந்தே அருள்மிகு கொளஞ்சியப்பர் வெளிப்பட்டார். இதுபற்றி வழங்கும் ஐதிகச் செய்தி மிகவும் சுவையானது.

### பசுவை வழிபடுதல்:

இந்தியத் திருநாட்டில், இந்துப்பெருமக்களால் பெரிதும் போற்றிக் கொண்டாடப்படும் விலங்கு பசுவாகும். இதனைத் தெய்விகம் நிறைந்ததாகக் கருதி வணங்குவது நமது மரபு. கோமாதா என்று மக்கள் இதனைப் போற்று வர். தேவர்கள் காமதேனுவாகப் போற்றிக்கொண்டாடுவர். திருக்கோயில்களில் நித்திய பூசைகளோடு கோபூஜை நிகழ்த்துதலும் உண்டு. பசு பூசித்த தலங்களும் தமிழ கத்தில் உண்டு. பசுவால் பெயர் பெற்ற நகரங்களும் இங்கே உள்ளன. காட்டுப்பகுதியில் மறைந்துறைந்த கொளஞ்சியப்பர் வெளிப்பட ஒரு பசு காரணமாக அமைந்தது என்பது வியப்பூட்டும் செய்தியாகும்.

### பாலாபிடேகம்:

மணவாளநல்லூர் காட்டுப்பகுதியில், கருங்கல்லால் சமைந்த சிறிய ஒரு பீடம் புதர்களின் இடையே மறைந்து

கிடந்தது கலியுகத் தெய்வமான கந்தப்பெருமான் அப் பீடத்தில் எழுந்தருளி மக்களுக்கு அருள் வழங்கத் திருவுளங் கொண்டான். ஒருநாள் மாடுமேய்க்கும் சிறுவர்கள், மேய்ப் பதற்காக ஓட்டிக்கொண்டு வந்து அப் பகுதியில் மேயவிட்ட பசுக்கூட்டத்திலிருந்து ஒரு பசு, மந்தையைவிட்டுப் பிரிந்து தனியே புதர் மண்டிய பகுதியில் சென்று மேய்ந்து திரும் பியது. முதலில் அதைச் சாதாரணமாகக் கருதியிருந்த அச் சிறுவர்களில் ஒருவன், நாளும் ஒரு பசு மட்டும் தனியே பிரிந்து, குறிப்பிட்ட ஒரு இடத்தில் சென்று மேய்வதைக் கவனித்து வந்தான். அண்மையில் கன்று ஈன்ற அப்பசுவின் செயல் அவனுக்கு விநோதமாகத் தோன்றிற்று. மற்றைய சிறுவர்களிடம் அவன் இதனைக்கூற, அனைவரும் அதன் உண்மைகாண ஒருநாள் அப்பசுவைப் பின் தொடர்ந்தனர். பசுவின் கண்ணில் படாது மறைந்திருந்தனர். சிறிது நேரம் அப் பகுதியில் மேய்ந்த பசு, சிறிது தூரம் நடந்து ஓரிடத்தில் ஆடாது அசையாது நின்றது. என்ன வியப்பு! கன்று முட்டாமல், கறப்பார் இல்லாமல், மலம் குழைந்து நின்ற பசு மடியிலிருந்து பால் காம்புகள் வழியே பீரிட்டது. கண்டவர்கள் கண்கள் அகல விரிந்தன. மெய்சிலிர்த்தனர். வியப்போடு நடந்ததை ஊரவர்களுக்குக் கூறினர். அனை வரும் ஒருங்கு திரண்டு மறுநாளும் சென்று மறைந்து நின்று அதே காட்சி கண்டு வியப்பெய்தினர். பசு அகன்ற பின் பயபக்தியுடன் அருகில் சென்று பார்த்தனர்.

**கந்தனைக் கண்டனர்!**

புதர்களுக்கு இடையே கருங்கல் பீடம் ஒன்று ஆவின் பாலால் அபிடேகிக்கப்பட்டு, ஒளிவீசிக் கிடக்கக் கண்டனர். அப்பகுதியே விளக்கமுற்றுத் திகழ்ந்தது. இது வெறும் பீடம் அன்று. தெய்வம் ஒன்று இதில் ஆவேசித்திருக்கிறது என்று உணர்ந்தனர். செடி கொடிகளை அகற்றினர். தரையி லிருந்து சுமார் 2அடி உயரத்தில் அமைந்திருந்த பீடத்தில்

கோயில் கொண்டுள்ள பெருமான் யார் எனத் திகைத்தனர். ஆவின் பால் அபிடேகம் கொண்ட ஐயன், அபிடேகப் பிரியனாகிய முருகப் பெருமானே என்று உளங்கொண்டனர். அப்பனே முருகா! என்று அன்புடன் வணங்கினர். ஊர்மக்களுக்கு இச் செய்தி பரவியது.மணவாளநல்லூராரும், விருத்தாசலத்தினரும் கூட்டம் கூட்டமாக வந்து, பீட வடிவில் தன் கோலம் காட்டாது, கரந்து உறையும் கந்தனை இனங் கண்டு போற்றினர். சிறு கொட்டகை அமைத்துக் கோயில் செய்தனர். கொளஞ்சி அப்பா! எனக் கூறித் துதித்தனர்.

வேறு ஒரு சான்று:

மக்களுக்கு அருள் வழங்க இறைவன் திருவுளங் கொண்டால், ஐயன் எப்பொருளிலும் ஆவேசித்து நின்று தன்னை வெளிப்படுத்திக் கொள்வான். பலநூறு ஆண்டுகளுக்கு முன்னே நடந்த ஒரு திருவருட்செயல் இங்கே ஒப்பு நோக்கத்தக்கது. அந்நியர் படை எடுப்பிற்கு அஞ்சி ஒருமுறை திருநெல்வேலிச் சிவபெருமானை ஒரு மூங்கில் புதரினுள் புதைத்துக் காத்தனர். பலஆண்டுகள் வரை நெல்லையப்பர் புதர் அடியிலேயே புதைந்து கிடந்தார். புதைத்தவர்கள் மறைந்தனர் ஏனையோரர் மறந்தனர். பகை அகன்றது. இந்நிகழ்ச்சி எவர்க்கும் தெரிந்திலது. காலப் போக்கில் மூங்கில் புதரும் அழிந்து போயிற்று. புதைந்திருந்த நெல்லையப்பர் வெளிப்பட்டு அருள் வழங்கத் திருவுளம் கொண்டார்.

நெல்லையப்பர் வெளிப்படல்:

ஒருநாள் இடைக்குலப் பெண் ஒருத்தி பசுவின் பால் நிறைந்த பாத்திரத்தைத் தலையில் சுமந்து அவ்வழியே சென்றாள். ஏதோ ஒன்று காலில் தடுக்க நிலைகுலைந்தாள். பாற்குடம் கீழே சாய்ந்தது. கீழே பார்த்தாள். ஒன்றும்

தெரிந்திலது. அடுத்தநாள் விழிப்போடு வந்தவள் அன்றும் அதே இடத்தில் வீழ்ந்தாள். பால் சிந்தியது பலநாளும் ஒரே இடத்தில் நடக்க ஐயுற்ற அப்பெண் உறவினர்களுடன் வந்து பாற்குடம் வீழும் இடத்தினை அகழ்ந்து பார்த்தாள் சிவலிங்கத் திருமேனி கண்ணில் பட்டது. வியந்து திருமேனியைக் கோயிலில் சேர்ப்பித்தனர். இதனை

*தவேயீன்ற முத்தரை வெட்டினா னேயீனடய*
*தாயீன்ற மேனித் தயங்கவே-பேயாகேள்*
*எத்தனை நாள்என்றே இடறுவான் பாற்குடத்தை*
*அத்தனையும் வேண்டும் அவற்கு'*

என்ற இரட்டைப்புலவர் பாடல் இதனை மெய்ப்பிக் ன்றது. அன்று நெல்லையப்பர் பாற்குடத்தை இடற் வைத்து அபிடேகம் கொண்டு வெளிப்பட்டார். இன்று கொளஞ்சியப்பர் பாற்பசுவை, தாமே பால் சுரக்க வைத்து அபிடேகம் கொண்டு வெளிப்பட்டார்.

மூவகைத்திருமேனி:

மணவாளநல்லூரில் கோயில் கொண்டுள்ள கொளஞ் யப்பர் உருவத்திருமேனி கொண்டவர் அல்லர். கண்ணுக் புலப்படா அருவத் திருமேனியினரும் அல்லர். உருவமும்-அருவமும் கலந்த அருவுருவத் திருமேனி கொண்டு ஒரு பீடத்தின் வடிவில் இங்கே காட்சி தருபவர். சிவபெருமான் கொண்டருளிய திருமேனிகள் இருபத்தைந்து என்பர் இவற்றைச் சிவமூர்த்தங்கள் என்பர். இவற்றுள் சிவலிங்கத் திருமேனி ஒன்றே அருவுருவம். ஏனைய உருவத் திருமேனி கள். பெரும்பாலும் முருகப்பெருமான் உருவத் திருமேனி கொண்டே காட்சிதருவர். ஒரு திருமுகம் அல்லது ஆறு திருமுகத்துடன் முருகன் திருமேனி அமைந்திருக்கும். மண வாளநல்லூரில் முருகன் அருவுருவத் திருமேனி கொண்டு எழுந்தருளியிருப்பது பெருஞ்சிறப்பாகும்.

கந்துடைநிலை:

ஒரு பீடத்திருமேனி கொண்டு இங்கே முருகன் எழுந்தருளியிருப்பது நம்மனோர்க்கு வியப்பினைத் தருவதாயினும், இது புதுமை அன்று என்பதைத் திருமுருகாற்றுப் படை புலப்படுத்துகின்றது. இதன் ஆசிரியர் நக்கீரர் பழமுதிர் சோலை பற்றிக் கூறும் போது முருகன் விரும்பி உறையும் இடங்களைப் பட்டியல் இட்டுக்காட்டுகிறார்.

'ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறியர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும், பொதியிலும் கந்துடை நிலையினும்'...

முருகன் உறைவதை இந்நூல் எடுத்துக்காட்டுகின்றது.

பாடற்பொருள்:

மேற்குறித்த பாடல் வரிகளின் பொருள் வருமாறு:- 'தன்பால் அன்புடையார், தன்னை வழிபட்டுத் துதித்தால் தன் மனம் பொருந்தி எழுந்தருளுதற்குரிய இடங்களிலும், வேலன் அலங்கரித்த வெறியாடும் இடங்களிலும், காடுகளிலும், சோலைகளிலும், அழகுமிக்க ஆற்றிடைக் குறைகளிலும், ஆறுகளிலும், குளங்களிலும், மற்றும் வேறுபல ஊர்களிலும், நாற்சந்தியிலும், முச்சந்தியிலும், புதிய பூக்களை உடைய கடம்ப மரத்தின் அடியிலும், ஊர்க்குப் பொதுவான மரத்தடியிலும், பொதுவான அம்பலத்திலும், தன் அடையாளமாக நடப்பட்ட கல் நிற்கும் இடத்திலும் முருகன் வீற்றிருப்பான்.'

'கந்துடை நிலை' என்பதே ஒரு கல்லில் ஆவேசித்து நிற்கும் முருகனின் தொன்மையான நிலை. அத்திருக் கோலமே மணவாளநல்லூரில் நாம் காணும் கொளஞ்சியப்பர் திருவுருவமாகும்.

மணவாளநல்லூரார் முருகப்பெருமானை மக்கள் கொளஞ்சியப்பர் என அழைப்பதன் உண்மையான காரணம் புலனாகவில்லை. பல கருத்துக்கள் இதுபற்றிக் கூறப்படுகின்றன.

**குறிஞ்சி அப்பன்:**

தமிழக நிலப்பகுதியை நான்காகப் பிரிப்பர். மலை காடு, வயல், கடல் என்பன அவை. இதுபற்றியே உலகினையும் நானிலம் என முன்னோர் குறித்தனர். இவற்றை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என அகப்பொருள் நூலார் குறித்தனர். அவற்றுள் குறிஞ்சி என்பது மலையும், மலையைச் சார்ந்த பகுதியும் ஆகும். நம் முன்னோர் ஒவ்வொர் நிலத்திற்கும் ஒவ்வோர் தெய்வத்தை நாட்டினர். அவ்வாறு குறிஞ்சி நிலத்திற்கு அவர்கள் நாட்டிய தெய்வம் முருகன். இப்பெருமானைக் குறிஞ்சிக் கோ, குறிஞ்சிக் கிழவன், குறிஞ்சிவேள், குறிஞ்சிக் காவலன் எனப் பலபட அழைப்பர். 'குறிஞ்சி அப்பன்' என்ற பெயரே நம்மவர்களது உச்சரிப்பில் மெல்ல மெல்லத் திரித்து கொளஞ்சியப்பராக மாறியிருக்கக் கூடும் என்பது ஒரு சிலர் கருத்தாகும்.

**கொளஞ்சிமரம்:**

இரண்டாவதாகக் கூறப்படும் கருத்து சிந்திக்கத் தக்கது. தமிழ்நாட்டு மரவகைகளில் நாரத்தை என்பதும் ஒன்று. நாரத்தை இனங்களில் சற்றே இனிப்பான காய் காய்க்கும் ஒரு வகையைக் கொளஞ்சி நாரத்தை என்பர். அத்தகு நாரத்தை எலுமிச்சை வகைகளுள் ஒன்றாகவும் குறிக்கப்படும். இவற்றின் இலைகள் ஏறத்தாழ ஒன்று போலவும், காய்கள் மட்டும் வேறுபட்டும் அமையும். அவ்வாறான கொளஞ்சிச் சிறு மரங்கள் இப்பகுதியில் இன்றும் காணப்படுகின்றன. கொளஞ்சி மரக்காட்டில் எழுந்தருளியிருந்த அப்பர் என்ற கருத்தில் மக்கள் கொளஞ்சியப்பர் என அழைத்திருக்கலாம் என்பதும் ஒரு கருத்து. நன்செய்

வயல்களுக்கு உரமாகப் பயன்படுத்தப்படும் ஒருவகைப் பசுந்தாள் உரச்செடிக்குக் 'கொளஞ்சி' அல்லது 'குளஞ்சி' எனப்பெயர் கூறுவர். இத்தகு கொளஞ்சிச்செடிகள் மத்தியில் எழுந்தருளிய பெருமான் 'கொளஞ்சியப்பர்' என வழங்கப்பெற்றிருக்கலாம் என்பர்.

ஏறழஞ்சி எனும் மரம்:

வேறு ஒரு செய்தியும் கொளஞ்சியப்பர் என்ற பெயர்க் காரணம் தொடர்பாய்ச் சிந்திக்கத்தக்கது. இன்றும் மணவாளநல்லூர் கொளஞ்சியப்பர் திருக்கோயில் வளாகத்தில் வேறு எங்கும் காணப்படாத ஏறழஞ்சி என்ற ஒருவகை மரம் காணப்படுகிறது. சுமார் 15 அடி உயரம் வளர்ந்துள்ள இம்மரம் இக்கோயில் வளாகத்திலேயே சுமார் 40 வரை உள்ளன. இதன் காய்கள் மரத்திலிருந்து கீழேவிழுந்து, பின்னர்த்தாமே மேலெழுந்து மரத்தைச் சாரும் என்று கூறப்படுகிறது. இந்த ஏறழஞ்சி மரக் காட்டுள் உறையும் பெருமான் பெயர் மரப்பெயரின் திரிபாக அமைந்திருக்கக்கூடும் என்பதும் சிந்திக்கத்தக்கதே.

குஞ்சிப்பிள்ளை:

ஒரு குடும்பத்தின் கடைக்குட்டி மற்றும் சிறு பிள்ளைகளைக் குட்டி - குஞ்சு என்று அழைப்பது இன்றும் வழக்கில் உள்ளது. ஆனேறு உயர்த்திட்ட ஐயர்க்கும் அம்மைக்கும் அருமருந்தாக வந்த ஆதிப்பிரானாகிய முருகன் சிவனார் குடும்பத்தின் கடைசிப் பிள்ளை அல்லரோ! எனவே குஞ்சியப்பன், கொளஞ்சியப்பன் ஆனதோ என்றும் ஒரு சிலர் கருதுகின்றனர்.

உள்ளம் குழைவித்தல்:

பக்தியில் உள்ளம் கரைவதைக் குழைதல் என்று கூறுவர். நாட்டுவழக்கில் சோறு கொழஞ்சி போச்சு என்பர்.

தன்னை நாடி வழிபடும் அடியாரின் நெஞ்சக்கனகல்லை நெகிழ்ந்து உருகவைத்துக் குழைவிக்கும் பெருமான் முருகன். அதுமட்டுமல்லாமல் தன்னை நாடி வழிபடும் அன்பர்களின் அன்பில் குழைபவன் முருகப்பெருமான். தானும் அகம் குழைந்து, தன்னை வழிபடும் அடியாரையும் குழைவிக்கும் அப்பன் என்ற பொருளில் - சற்றே திரிந்து கொளஞ்சி யப்பர் என வந்திருக்கக்கூடும் என்றும் சிந்திக்கலாம்.

இறையியலில் ஆய்வு ஏன்?

ஆய்வுகளும் - முடிபுகளும் உலகியலில் நிகழ்த்தப்பெற வேண்டுவன. இறையியலில் அவற்றிற்கு அத்துணை இன்றி யமையாமை தேவைப்படுவதில்லை. சர்க்கரையை எப் பெயர் இட்டு அழைத்தாலும் அதன் இனிமை ஒன்றே! அதன் இனிமை, அதைக்குறித்துவரும் சொல்லோடு பொருந்திவர வேண்டுவதின்று. கொளஞ்சியப்பர் என்ற திருநாமம் இன்று இலட்சக்கணக்கான அன்பர்கள் உள்ளத் தில் நிறைந்து நிற்பது. நாட்டுப்புற மக்களின் வழக்காறு இயற்கையோடு இயைந்தே அமையும். இதனை ஏற்றால் கொளஞ்சிக்காட்டு இறைவன், கொளஞ்சியப்பர் என ஆயினார் எனக் கோடல் பொருந்தும்.

முருகன் செய்த வழிப்பறி:

விருத்தாசலத்தின் நாற்றிசைகளிலும் கோயில் கொண்டுள்ள வேடப்பர் முதலிய தெய்வங்களைப் பற்றி முன்னரே குறிக்கப்பட்டது. இத்தெய்வங்கள் பற்றி வழங்கப் பெறும் செவிவழிச்செய்தி ஒன்று குறிப்பிடத்தக்கது. திரு முதுகுன்றம், தேவார மூவரில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றோடு தொடர்புடையது. சுந்தரமூர்த்தி சுவாமி கள் திருமுதுகுன்றப் பகுதிக்கு வந்தகாலை - இதுவோ முது குன்றம்! பழமலை! இறைவரோ பழமலை நாதர்! அம்மையோ விருத்தாம்பிகை (விருத்தம் -முதுமை) எனவே

ஊரும் கிழம். இறைவனும் கிழம், இறைவியும் கிழம் என்று கருதி இத்தலத்தைப் பாடாது போயினர். இதுகண்டு வருந்திய பழமலைநாதர் முருகனைச் சிந்தித்தார்.

தந்தையைப் பாடிய வாயால் தன்னையும் பாட வற்புறுத்திப் பாமாலைபெற்ற பண்ணவன் முருகன். இறைவன் திருவுளக் குறிப்பறிந்த முருகன் ஒரு வேட்டுவக் குமரனாகச் சுந்தரர் எதிர்சென்று அவரது பொன்னையும் பொருளையும் கவர்ந்து கொண்டு, பழமலைக்கு வந்து பெற்றுக் கொள் என்று கூறிச் சென்றனர். சுந்தரர் குற்றம் உணர்ந்து திருமுதுகுன்றம் சேர்ந்து, பழமலைநாதரைப் பாடி, பிழைபொறுக்க வேண்டினர். அவ்வாறு சுந்தரரை வழிமறித்து வேட்டுவக் குமரனாக வந்த முருகனே சிவனார் ஆணைவழி, விருத்தாசலத்தின் நாற்றிசைகளிலும் வேடப்பர் முதலிய காவல் தெய்வங்களாகக் கோயில் கொண்டனர் என்று கூறப்படுகிறது. சுந்தரர் வரலாறு கூறும் பெரிய புராணத்தில் இதுபற்றிச் சிறு குறிப்பும் இல்லை. இக்கதை எக்காலத்தில், யாரால் தோற்றுவிக்கப் பெற்றது என்பதை அறியக்கூடவில்லை.

வளர்ச்சி நிலை:

சிறிது சிறிதாக வளர்ந்த கொளஞ்சியப்பர் வழிபாடு இன்று மேலும் மேலும் சிறந்து, தமிழகத்தின் தலையாய முருகத்தலங்களுள் ஒன்றாகச் சிறந்திலங்குகின்றது. தன்னை அண்டிவழிபடும் அன்பர்களின் தீராநோய் தீர்த்தருளும் கொளஞ்சியப்பர், நாடிவரும் அன்பர்களுக்குப் பொன்னும் மெய்ப்பொருளும், போகமும், திருவும் வழங்கும் கருணைக் கடலாகவும் திகழ்கின்றான். மன நோயாளிகளும் இங்கே வழிபட்டுக் குணம் பெற்று வருகின்றனர். இங்கே நிகழ்த்தப்படும் அன்பர்களின் நேர்த்திக்கடன்கள் வித்தியாசமானவை. அவை விரிவாகப் பின்னர்க் கூறப்படும்.

கருவறைகள்:

இன்று கொளஞ்சியப்பர் திருக்கோயில், விரிந்து பரந்த நிலப்பரப்பில் சுற்றுச்சுவர்சூழ அழகிய நிலையில் விளங்குகின்றது. கிழக்குப் பார்த்த சந்நிதியில் கருவறையுள் பீடத்திருமேனி கொண்டு கொளஞ்சியப்பர் அருள் வழங்குகின்றார். கருங்கற்பீடத்தின் கீழே முருகனது சடாட்சரம் பொறிக்கப்பெற்ற ஸ்ரீசக்கரம் ஒன்றும் இடம் பெற்றுள்ளது. அபிடேக ஆராதனைகள் யாவும் பீடவடிவில் திகழும் முருகப்பெருமானுக்கே நிகழ்த்தப் பெறுகின்றன. கொளஞ்சியப்பரின் வலப்பாகத்தில் கிழக்கு நோக்கிய சந்நிதியில் அருள்மிகு சித்திவிநாயகர் பெரிய திருமேனி கொண்டு காட்சி தருகிறார். இருவருக்கும் தனித்தனி விமானங்கள். கருவறைக்கு எதிரில் தற்கால அமைப்பில் மிகப்பெரிய தூண் அமைத்துக்கட்டப்பெற்ற மகாமண்டபம் அமைந்துள்ளது. மகாமண்டப முகப்பில் அழகிய சுதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பிறசந்நிதிகள்:

கொளஞ்சியப்பர், விநாயகர் சந்நிதிகளுக்கு எதிரில் மகாமண்டபத்தில் சுதை வேலைப்பாடுகளுடன் கூடிய வேட்டைக்குத் தயாரான நிலையில் அலங்கரிக்கப்பட்ட இரண்டு பெரிய குதிரைகள் நிற்கின்றன. நான்கு சேவகர்கள் அருகே நிற்கின்றனர். குதிரைச்சிலைகள் கண்ணையும், கருத்தையும் கவரும் கம்பீரத் தோற்றம் உடையன. கருவறையின் தென்மேற்கே பிள்ளையார் மூலையில்-கோயிலின் பின்பக்கமாக அடுத்தடுத்து இடும்பனும், கடம்பனும் தனிக்கோயில் கொண்டு விளங்குகின்றனர். சுவாமிசந்நிதிக்கு எதிரில்-மகாமண்டபத்தை ஒட்டி சற்றே இடப்பக்கத்தில் முனியப்பர் சந்நிதி அமைந்துள்ளது. முனியப்பருக்கு எதிரில் கல்லிலும், இருப்பிலும் வடிக்கப் பெற்ற நூற்றுக்கணக்கான சூலங்கள் மேல் நோக்கி,

நெருக்கமாக நாட்டப்பெற்றுள்ளன. இவற்றை அடுத்துச் சற்றே கிழக்கில் வீரனார் காட்சி தருகிறார்.

இராஜகோபுரம்:

கொளஞ்சியப்பர் சந்நிதிக்கு நேர் எதிரே மகாமண்டபத்திற்குக் கிழக்கே மிகப்பெரிய ஐந்து நிலை இராஜ கோபுரம் ஒன்று சுதை வேலைப்பாடுகளுடன் பேரழகோடு காட்சிதருகிறது. கோபுரத்தின் எதிரில் சற்று இடப்புறத்தில் மிகப்பெரிய ஆலயநிர்வாக அலுவலகம் அமைந்துள்ளது. அலுவலகத்திற்கும், இராஜகோபுரத்திற்கும் இடையே சாலையில் இருந்து கோயிலுக்குள் வரும் பிரதான வாயில் உள்ளது. சுதைச்சிற்பம் கொண்ட வளைவுடன் இது அமைந்துள்ளது. சாலையைஒட்டி திருக்கோயிலுக்குச் சொந்தமான கடைகள் நீள அமைந்துள்ளன. அலுவலகக்கட்டிடத்திற்குப் பின்னால் கலை அரங்க மேடையும், அதற்குப் பின்னால் யாத்திரீகர் தங்கும் விடுதியும், திருக்கோயிலின் இடப் பக்கத்தில் முன்னதாகத் திருமணக்கூடமும், அடுத்து விருந்தினர் விடுதியும் அமைந்துள்ளன.

இனிய கொளஞ்சியப்பர் அருள்வரலாறு அறிந்து அவர் ஆலயத்தையும் தரிசித்த நிறைவோடு, இங்கே நிகழ்த்தப் பெறும் நேர்த்திக்கடன்களையும் இனிக்கண்டு மகிழ்வோம்.

## இயல் : நான்கு

# நேர்த்திக் கடன்

**பராய்க் கடன்:**

தமிழ் மக்களின் கடவுள் பக்தி பெரிதும் உறுதி மிக்கது. எத்தகைய வாதப் பிரதிவாதங்களாலும் அவர்கள் குருதியோடு கலந்துள்ள இறையன்பை மாற்றுதல் இயலாது. 'அஞ்சியாகிலும், அன்பு பட்டாகிலும் நெஞ்சமே நீ நினை' என்ற ஆன்றோர் வாக்கிற்கு ஏற்பத் தமிழ்மக்கள் நெஞ்சம் பயபக்தியோடு இறைவனை நினைவது. துன்ப நீக்கத்திற்கும், இன்ப ஆக்கத்திற்கும் இறைவனை வேண்டும் போதெல்லாம், இன்னது தந்தால் இன்னது செய்வேன் என வேண்டிக்கோடல் தமிழர் வழிபாட்டு மரபு. இதனைப் பராய்க் கடன் எனச் சங்க இலக்கியங்கள் பேசும். நேர்த்திக் கடன் என்பது பிற்கால வழக்கு. நேர்த்திக்கடனைக் குறித்த காலத்தில் முறையாக நிகழ்த்துவதில் தமிழர் விழிப்போடு செயற்படுவர். தெய்வக் குற்றம் வரலாகாது என்பதில் அவர்கள் கண்ணும் கருத்துமாகவும் இருப்பர்.

**இருவகை நேர்த்திக்கடன்:**

தமிழர்கள் நேர்த்திக்கடன் செய்தல் இருவகையாக அமையும். முன்னரே ஒன்றை நேர்த்திக்கடனாகச் செய்துவிட்டு, இன்னதை அருள் என ஒன்றை வேண்டுதல் ஒரு வகை இதனை நீ எனக்கு அருளினால் பின்னர் இவ்வாறான நேர்த்திக்கடன் நான் செய்வேன் என வேண்டி, விழைவு நிறைந்த பின்னர்க் கடன் செலுத்துதல் மற்றொரு வகை. இவ்விருவகையிலும் தமிழ்மக்கள் பல்வேறு தெய்வங்களுக்குச் செய்யும் நேர்த்திக்கடன்கள் இடத்துக்கு இடம் மாறுபடும். சிலவகை நேர்த்திக்கடன் எளிதாக அமையும். சிலவகை நேர்த்திக்கடன் அச்சமூட்டுவனவாக அமையும். இவற்றில்

எல்லாம் தமிழ்மக்களின் அளப்பரிய பக்தி வைராக்கியத்தை இனங்காணலாம்.

எத்தனை வகை:

மஞ்சள் துணியில், கையில் கிடைத்த காசைச் சுற்றி வைத்துப் பின் ஒரு நாள் உண்டியலில் சேர்ப்பர். பொன்னாலும், வெள்ளியினாலும் உடல் உறுப்புக்கள் செய்து வழங்குவர். உப்பும், மிளகும் வாங்கிக் கொட்டுவர். வெல்லத்தை நீரில் கரைப்பர். கஞ்சி காய்ச்சி ஊற்றுவர். மாவிளக்கு இட்டு நெய்த்தீபம் ஏற்றுவர். முடியிறக்குவர். அங்கப் பிரதிட்டணம் செய்வர். பல்வேறு காவடிகள் எடுப்பர். வெவ்வேறு நாள்களில் உண்டி குறைத்து விரதம் மேற்கொள்வர். நெருப்புக்குழி அமைத்துத் தீமிதிப்பர். ஆடு வெட்டுவர். கோழி அறுப்பர். எருமைக்கடாவெட்டுவர். தென்னம்பிள்ளை சார்த்துவர். விலங்குகளையும் தானியங் களையும் காணிக்கை வைப்பர். கோயில் சமைப்பர். திருமேனி செய்து பிரதிட்டை செய்வர். விளக்கிடுவர். தானம் அளிப்பர். தமிழர் நேர்த்திக்கடன்கள் இவ்வாறு பலப்பல.

முனியப்பர் சந்நிதி:

மணவாளநல்லூரில் கோயில்கொண்டு அருள் வழங்கும் குறிஞ்சித் தலைவனாகிய கொளஞ்சியப்பருக்கு நிகழ்த்தப் படும் ஒருவகை நேர்த்திக்கடன் பிற இடங்களில் இல்லாத வித்தியாசமானதும் வியப்பூட்டும் தன்மையதுமாகும். கொளஞ்சியப்பர் சந்நிதியில், மகாமண்டபத்தின் இடப் பாகம் வடக்கு நோக்கிக் கோயில் கொண்டுள்ளார் அருள் மிகு முனியப்பர். காண்பாருக்கு சற்றே அச்சம் தரும் திருமேனி. இவர் எழுந்தருளியுள்ள இடத்தின் கீழே தரை மட்டத்தில் வாழை மொட்டுப் போன்ற அமைப்பில் ஒரு கல் நின்றது. பல ஆண்டுகளுக்கு முன் அக்கல் அருகில் செல்வதற்கே மக்கள் அஞ்சுவர். ஒழுக்கக்குறைபாடு-தவறு

இழைத்தல் - திட்டு உடையோர் அருகில் சென்று அதனை உற்றுப் பார்த்தால் சிலருக்குச் சிரிப்பது போல் தோன்றும். சிலருக்கு அச்சமூட்டும். சிலர் அலறிப்புடைத்து ஓடும்படிச் செய்யும். சிலர் கண்டு நடுங்கி குளிர் சுரத்திற்கு ஆளாவர். இன்று அக்கல் இருந்த பகுதி மூடப்பட்டுள்ளது. அருள்மிகு முனியப்பர் அருகில் காட்சி தருகிறார். அவர் சந்நிதிக்கு நேர் எதிரே முன்னரே குறித்தவாறு கல்லாலும், இரும்பாலும் இயற்றப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட முத்தலைச் சூலங்களும், குத்தீட்டிகளும், பிறவகை அம்புகளும் மேல் நோக்கியவாறு நெருக்கமாக நட்டு வைக்கப்பெற்றுள்ளன.

நீதிவேண்டுதல்:

ஒருவரின் பொருள் களவு போய்விட்டால், ஒருவர் தம் உடைமைகளை மற்றவர் அபகரித்துக்கொண்டால், தமக்கு ஒருவர் தீங்கு செய்தால், அடித்தால், துன்புறுத்தினால் நீதி வேண்டி முன்பெல்லாம் ஊர்ச்சபையில் வழக்குத் தொடருவர். அரசர்கள் காலத்தில் நீதி வேண்டி மன்னர்க்கு விண்ணப்பம் செய்வர், தற்காலத்தில் வழக்கின் தன்மைக்கு ஏற்ப காவல்நிலையத்திலும், நீதிமன்றத்திலும் தம் குறை நீங்க ஆவன செய்ய எழுத்து மூலம் வேண்டுகோள் வைப்பர். கொளஞ்சியப்பர் அருள் வழங்கும் கருணையாளன். வேண்டுவார்க்கு வேண்டுவன வழங்கும் அருட்கொடையாளன். தம் அன்பர்களைத் துன்புறுத்துவார்க்கு உரிய தண்டனை வழங்கும் நீதி அரசன். அருட்கருணையோடு, மறக்கருணையும் வழங்கும் மாண்பினன்.

பிராது கட்டுதல்:

தம் குறை முடிக்க வேண்டி 'பிராது கட்டுதல்' என்ற நேர்த்திக்கடன் இங்கே மிகவும் புதுமையாக உள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வந்த சொல் வழக்குகளில் ஒன்று 'பிராது கொடுத்தல்' என்பது. ஒருவர் மேல் ஒரு வழக்கை எழுத்து வடிவில் நீதி மன்றத்தில் பதிவு செய்

தலை இத்தொடர் குறிக்கும். மணவாளநல்லூரில் தம் குறை முடிக்க வேண்டிக் கொளஞ்சியப்பரிடம் பிராது கட்டுதல் என்ற வழக்கம் இன்றும் மிகுதியாக உள்ளது. பிராது கட்டுதல் வழக்கு நோக்கில் மட்டுமல்லாது, ஒரு குறை முடிக்க வேண்டியும் இங்கே அமைகிறது. பொருள் களவு போய்விட்டாலோ, கொடுத்த கடன் திரும்பாவிட்டாலோ, பிறர் தம்மை வஞ்சித்து விட்டாலோ, கடும் நோயால் அவதி உற்றாலோ குடும்பப்பிரச்சனைகளால் வாடினாலோ, மகனுக்கோ, மகளுக்கோ திருமணம் தடைப்பட்டாலோ, வேலை கிடைக்காது வறுமைஉற்றாலோ, வேறு யாதொன்று வேண்டி நின்றாலோ யாவற்றையும் இங்கே பிராது கட்டி விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

கட்டணங்கள்:

நீதி மன்றத்தில் பிராது கொடுத்தால்-பிரதிவாதிக்குச் சம்மன் அனுப்புவர். ஊரைக் கூட்டத் தமுக்கு முழக்கி நகர்க்கு அறிவிப்பர். இவற்றிற்கான கட்டணத்தைப் பிராது கொடுப்பவர் செலுத்த வேண்டும். கொளஞ்சியப்பராகிய நீதி அரசர் முன் சம்மன் கட்டுவதற்கும் கட்டணம் உண்டு. இங்கே பிராதுக் கட்டணம் ரூபாய் ஏழும், பைசா பத்தும் ஆகும் இத்தொகை'. 1. பிராதுக்கட்டணம், 2. சம்மன் கட்டணம் 3. டாம்டாம் (தமுக்கு) கட்டணம் ஆகிய மூன்றற்கும் சேர்ந்ததாகும் இக்கட்டணத்துடன், பிராது கட்டுபவர் எந்த ஊரில் இருந்து மணவாளநல்லூர் வருகிறாரோ, அந்த ஊருக்கும் மணவாளநல்லூருக்கும் இடையே உள்ள தூரத்தைக் கிலோ மீட்டரில் கணக்கிட்டு - ஒரு கிலோ மீட்டருக்கு பத்துகாசு வீதம் தமுக்குக்கட்டணத்தோடு சேர்த்துக்கட்டி, அலுவலக ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

எப்படி பிராது கட்டுவது:

பிறகு பிராது வாசகத்தை ஒரு வெள்ளைத் தாளில் கீழ்க்கண்டவாறு தொடங்கி எழுத வேண்டும்.

"மணவாளநல்லூர் அருள்மிகு. கொளஞ்சியப்பர் திருப்பாத கமலங்களைப் பணிந்து - தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், வடபாதிமங் கலத்தைச் சேர்ந்த இராமசாமிப்பிள்ளை குமாரனாகிய சண்முகமாகிய நான் என்னுடைய குறைகளைக் கீழ்க்கண்டவாறு பிராது மூலம் திருவடிகளுக்கு விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

என்று தொடங்கி முடிக்க வேண்டிய குறைகளை அடுத்து எழுதி, நிறைவாகக் கையொப்பம் இட்டு, தேங்காய், பழம் முதலியவற்றோடு ஒரு அர்ச்சனைத் தட்டில் இப் பிராதுக் கடிதத்தையும் மடித்து வைத்துக் கொளஞ்சியப் பர் சந்நிதியில் சிவாசாரியரிடம் வழங்க வேண்டும். அவர் அர்ச்சனை செய்து, பிராதுக்கடிதத்தைச் சுவாமி பாதத்தில் வைத்து வழிபட்டு, பிரசாதத்துடன் மீண்டும் நம்மிடம் தரு வார். நாம் அக்கடிதத்தைப் பலவாறு குறுக்கும் நெடுக்குமாக மடித்து, ஒரு சிறு விபூதிப் பொட்டலம் போல் ஆக்கி, சிறு நூலால் கட்டி, அதனை முனியப்பர் சந்நிதியில் இருக்கும் வேலில் ஒரு நூலால் கட்டித் தொங்க விட்டு விட்டு விடை பெறலாம். கொளஞ்சியப்பர் அருள், அவரவர் நல்வினைக்கு ஏற்ப மூன்று மணி நேரத்திலோ, மூன்று நாளிலோ, மூன்று மாதத்திலோ வெளிப்படும். பிராது கட்டியவர் எண்ணம் நிறைவேறும். இன்றும் இங்கே பிராது கட்டுபவர்கள் தொகை ஏராளம். நலம் பெற்றவர்கள் ஆயிரம் ஆயிரம்! ஆண்டொன்றுக்கு இவ்வகையில் கட்டணமாகவே ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் திருக்கோயிலுக்கு வருவாய் அமைகிறது எனின் பிராது கொடுப்பார் தொகையை ஒருவாறு அறிய இயலும். எண்ணம் நிறைவேறியபின் பிராதை எழுத்து மூலம் மீண்டும் திரும்பப்பெற்றுக் கொள்ளவேண்டும்.

அருள் பெற்ற அன்பர்கள்:

இவ்வாறு கொளஞ்சியப்பரிடம் பிராது கட்டிக் கைமேல் பலன் பெற்ற அன்பர்களின் அனுபவங்கள் மெய்சிலிர்க்க

வைப்பன, அவற்றை ஒன்று திரட்டினால் அவையே ஒரு நூலாகும். சென்னையைச் சார்ந்த அன்பர் ஒருவர்- சந்தர்ப்ப சூழ்நிலையால் உத்தமியாகிய தம் மனைவியின்- அவள் நடத்தையில் சந்தேகம் கொண்டார். அது பூதாகார மாக உருவெடுத்தது. பிணக்கு முற்ற இருவரும் பிரிந்து போயினர். விவாகரத்து வரை பிரச்சனை எல்லை கடந்தது. குற்றமற்ற மனைவியார்க்கு யாரோ ஒரு அன்பர் மணவாளநல்லூரில் பிராது கட்டிப்பார்க்க நெறிப் படுத்தினார். நம்பிக்கையோடு அவ்வம்மையார் பிராது கட்டி நெஞ்சுருகிக் கண்ணீர் மல்கக் கொளஞ்சியப்பரைப் பிரார்த்தித்துத் துன்ப மேகம் அகலும், துயர்தீரும் என்று நம்பிக்கையுடன் திரும்பினார். பழிக்கஞ்சிச் சொக்கனின் திருக்குமரன் ஒரு பெண்ணுக்குற்ற பழியைத் தரியாது விரைந்து அருளினான். கணவர் ஐயம் தகர்ந்தது. கணவன் மனைவி இணைந்தனர். ஒரு மகனும் பிறந்தான். மூவரும் மீண்டும் மணவாளநல்லூர் வந்து, ஒரு வேல்வாங்கிக் கொடுத்து கொளஞ்சியப்பரை வாழ்த்தி வணங்கிச்சென்றனர்.

தவறுக்குத் தண்டனை:

தந்தை - மகன் உறவு எத்துணை உன்னதமானது? அந்த உறவு முறை இன்று தறிகெட்டு நிற்கிறது. தந்தைக்கு உபதேசித்த தகப்பன்சாமி முருகன் என்றாலும், ஐயன் அருள்பெற்றே அவன் சூரசம்காரத் திற்கு எழுந்தருள்வதை இன்னும் ஐதிக விழாவாக நாம் கண்டு மகிழ்கிறோம். மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது ஆன்றோர் அருள் மொழி. சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தந்தை கொளஞ்சியப்பருக்கு முன் நின்று கண்ணீர் சிந்தினார், கசிந்து அழுதார். அவர்உற்ற குறை என்னதான் தெரியுமா? பெற்ற மகன், தந்தையைப் பகைத்து, தோளிலும் மார்பிலும் தூக்கி வைத்துக் கொண்டு, இரவெல்லாம் கண்விழித்து வளர்த்த

தந்தையையே கைநீட்டி அடித்தும் விட்டான். கொளஞ்சியப்பா நீ கேள் என்று, தந்தை பிராது கட்டினார். வீடு திரும்பிப் பார்த்தால் எந்தக் கை தந்தையை அடித்ததோ அந்தக்கை வாதத்தால் முடங்கிப் போய்-இழுத்துக்கொண்டது. அருள்வழங்கச் சற்று காலம் நீடித்தாலும், தவறுகளுக்கு தவறாது தண்டனை வழங்கும் கொளஞ்சியப்பன் அருள்பாடு அவனுக்குத் தெரிந்தது.

நோய் நீக்கி அருளியது:

பெண்ணாடம் அன்பர் ஒருவர் கொளஞ்சியப்பர் பக்தர். பழவினைப்பயனால் அவர் துணைவிக்குத் திடீரென ஒரு நாள் பைத்தியம் பிடித்தது. பார்க்காத மருத்துவம் இல்லை. செல்லாத கோயில் இல்லை. நோய் நாளும் நாளும் கூடிற்றே அன்றிக் குறைந்த பாடில்லை. கலங்கிய அன்பர்க்குக் கொளஞ்சியப்பருக்குப் பிராது கட்டும் எண்ணம் வந்தது. வணங்கிக் கட்டினார். பைத்தியம் தெளிந்தது. கொளஞ்சியப்பர் அருள் கூடி வந்தது. துணைவியோடு வந்து வழிபட்டுக் காணிக்கை செலுத்திச் சென்றார். சென்னை அன்பர். திரு. சி. ஆர். சுப்பிரமணியம் என்பவர் நீண்டநாள் தடைப்பட்டுக்கொண்டே வந்த தம் இருமகள்களின் திருமணம் விரைந்து நடக்க அருளு மாறு பிராது கட்டினார். மிக விரைவில் திருமணம் கூடி வந்தது. பெண்கள் மண வாழ்வு பெற்று மகிழ்ந்தனர். இன்றும் திருமணம் ஆகாதவர்க்கு உடன் திருமணம் கூடிவரவும், வேலை அற்றார்க்கு வேலைவாய்ப்பு அமைய வும் கட்டப்படும் பிராதுகளே மிக அதிகம்.

பாமாலை பிறந்தது:

விருத்தாசலத்தை அடுத்துக் கீழ்த்திசையில் அமைந் துள்ள சிற்றூர் கார்குடல் என்பது. இவ்வூர் கார்காத்த வேளாளர் மரபில் வந்த திரு. தி. சண்முகம் பிள்ளை

அவர்கள் சிறந்த சிவபக்தர். பழவினைப்பயனால், இவர்க்கு, எவ்வகை மருத்துவத்தாலும் தீராத வயிற்று வலி வந்துற்றது. பல ஆண்டுகள் துன்புற்ற இவர் கொளஞ்சியப் பரை நினைந்து, விரதம் மேற்கொண்டு வெள்ளிக்கிழமை தோறும், மணவாளநல்லூர் சென்று நெஞ்சுருக வழிபட்டுவர அவர் வயிற்று நோய் தீர்த்தருளவல்ல வைத்தியநாதனு மாய் விளங்கும் கொளஞ்சியப்பர் அருளால் அகன்றது நலம் பெற்றார். நேர்த்திக்கடனாகத் திருவாமாத்தூர் தவத்திரு தி. செ. முருகதாசசுவாமிகள் இயற்றிய கொளஞ்சியப்பர் பிள்ளைத் தமிழ்ப் பதிகம் என்ற சிறு நூலை தம்மணிவிழா நாளில் வெளியிட்டு 25—8—1973 அன்று அன்பர்களுக்கு வழங்கினார். பூமாலை சுமந்த கொளஞ்சியப்பர் இருதோள்களில் என்றும் வாடாத தமிழ்ப் பாமாலையும் மணம் பரப்பியது. முப்பது அழகிய பாக்கள் அச்சிறு நூலில் இடம்பெற்றுள்ளது.

பிள்ளைத்தமிழ்:

கொளஞ்சியப்பர் பிள்ளைத் தமிழ்ப் பதிகம் பின்னர், கொளஞ்சியப்பர் பிள்ளைத் தமிழ் நூலாக 10—9—1974இல் விரிவாக உரையுடன் வெளியிடப் பெற்றது. அப்போது கொளஞ்சியப்பர் திருக்கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவராய் விளங்கிய விருத்தாசலம் வழக்குரைஞர் சைவத் திருவாளர் டி.எஸ்.முருகேசன் அவர்கள் அரியமுயற்சி யால் அந்நூல் வெளிவந்தது. பருவத்திற்குப் பத்துபாடல் களாக நூறு பாடல்களால் கொளஞ்சியப்பர் பிள்ளைத் தமிழ் நிறைகிறது. நூலின் பிற்சேர்க்கையாக சுவாமிகள் இயற்றிய திருப்புகழ் ஒன்று உட்பட இருபது பாடல்கள் இடம் பெற்றுள்ளன. மரபு நெறி மாறாத சிறந்த பிள்ளைத் தமிழ் நூலாக அது விளங்குகின்றது. பிற்சேர்க்கையில் மண வாளநல்லூரில் எழுந்தருளியுள்ள சித்திவிநாயகர், இடும் பன், கடம்பன் ஆகிய இறையவர்கள் மீது இயற்றப்பெற்ற அழகிய வெண்பாக்களும் இடம் பெற்றுள்ளன. இந்

நூலன்றி அன்பர்கள் இயற்றிய சில தனிப்பாடல்களும் இத் தலத்திற்கு உண்டு.

வேப்பெண்ணெய் மருந்து:

பிராது கட்டுதல் அல்லாது வேறுபலவகை நேர்த்திக் கடன்களும் அன்பர்களால் இங்கே மேற் கொள்ளப் பெற்று வருகின்றன. சங்கரன்கோயிலில் ஒருவகை புற்று மண் மருந்தாக விளங்கும். புள்ளிருக்கு வேளூரில் திருச் சாந்து உருண்டையை விபூதியோடு மருந்தாக வழங்குவர். கொளஞ்சியப்பர் திருக்கோயிலில் அவ்வாறுவேப்பெண்ணெய் நன் மருந்தாக வழங்கப் பெற்று வருகின்றது. வேப்பெண் ணெயை அன்பர்கள் வாங்கிக் கொண்டு போய் கொளஞ்சி யப்பர் சந்நிதியில் வழங்க, அர்ச்சகர் அதனை இறைவன் பாதத்தில் வைத்து வழிபாடாற்றி, ஐயன் அருள் மருந்தா கிய விபூதியைச் சிறிது அந்த எண்ணெயில் இட்டு வழங்கு கிறார். தீட்டுத் தடங்கல் இல்லாது நீராடித் தூய்மையாக இருந்து இவ்வெண்ணெயைப் பெற்றுத் தடவினால் தீராத பல புற நோய்கள் எல்லாம் குணமாகி விடுகிறது. ஆறாத புண்கள், கட்டிகள், முதுகுப்பக்க பிளவைகள் முதலிய நோய்களுக்கும், மாடுகளின் கழுத்தில் வரும் காமாலைக் கட்டிகளுக்கும் கொளஞ்சியப்பர் அருள் கலந்த இவ்எண்ணெ கைகண்ட மருந்தாக விளங்கி வருகிறது. அர்ச்சனை சீட்டுக் கட்டணம் அல்லாது வேப்பெண்ணெய் மந்திரித்து வழங்க இங்கே கட்டணம் ஏதும் பெறப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வெண்ணெய் வெளி மாவட்டங்கள், மாநிலங்கள், வெளி நாடுகளுக்கெல்லாம் கொண்டு செல்லப்படுகிறது.

பங்குனி உத்திரம்: காவடிகள்:

மணவாளநல்லூர் கொளஞ்சியப்பர் திருக்கோயிலில் நிகழும் பெருவிழா பங்குனி உத்திரத் திருவிழாவாகும். பல்வேறு நலங்குறித்துப் பிரார்த்தித்து ஐயனை வேண்டி

நலம் பெற்ற பல்லாயிரக்கணக்கான அன்பர்கள் தங்கள் நேர்த்திக் கடன்களை இவ்விழாநாட்களிலேயே நிகழ்த்து கின்றனர். மணவாளநல்லூரைச் சுற்றிச் சூழ உள்ள ஐம்பது கிலோமீட்டர் தொலைவில் இருந்தெல்லாம் பங்குனி உத்திர நாளன்று இங்கே ஆயிரக்கணக்கான காவடிகள் எடுத்து வரப்பெறுகின்றன. அன்று ஒரு நாள் மட்டும் மூவாயிரம் முதல் ஐயாயிரம் காவடிகள் வருகின்றன. ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் காவடிகள் சுமந்து பரவசத்தோடு ஆடிப்பாடி வரும் காட்சி மெய்சிலிர்க்க வைக்கும் தன்மையது. அவற்றுள் பெரும்பாலானவை பால் காவடிகளே! மற்றும் இளநீர், பன்னீர், புஷ்பம், அலகுக் காவடிகளும் வருகின்றன. உடலெங்கும் அலகுகள் குத்திக் கொண்டு எடுத்து வரப்பெறும் செடல் காவடிகள் கொளஞ் சியப்ப பக்தர்களின் பக்தி வைராக்கியத்திற்குச் சான்று கூறிக் கண்டாரைப் பரவசப்படுத்துவன. பங்குனி உத்திரத் தன்று காவடி எடுக்க இயலாதவர்கள் அதற்கு எட் டாம் நாள் மறு உத்திர நாளன்று காவடி சுமந்து வந்து நேர்த்திக்கடன் செலுத்துவர்.

காவடிகள் எழுந்தருளல்:

பங்குனி உத்திரத்தன்று அருள்மிகு கொளஞ்சியப்பர் விருத்தாசலம் அருள்மிகு விருத்தகிரீசுவரர் திருக்கோவிலின் முன்னர் மணி முத்தாற்றின் கரையில் அமைந்துள்ள தீர்த்த மண்டபத்திற்கு எழுந்தருள்வார். உற்சவர்க்கு இங்கேயே சிறப்பான அபிடேக ஆராதனைகள் நிகழும். காவடி எடுக்கும் அன்பர்கள், தங்கள் காவடிகளுக்கும் அங்கேயே அபிடேகம் நிகழ்த்தி வழிபடுவர். பகலில் கொளஞ்சியப்பர் மேளதாளங்களுடன் விருத்தகிரீசுவரர் திருக்கோயிலை வலங்கொண்டு மணவாளநல்லூர் நோக்கி எழுந்தருள்வார். முன்னும் பின்னுமாக ஆயிரக்கணக்கான அன்பர்கள் காவடி சுமந்து பக்திப்பரவசத்துடன் ஆடி வருவர். மூன்று கிலோமீட்டர் தூரமும் காவடிகளாகவே

எழுந்தருளி வருதலை அன்று காணலாம். நாள் முழுவதும் காவடி அபிடேகம் நிகழ்ந்த வண்ணம் இருப்பதை அன்பர்கள் கண்டு பரவசமுறுவர்.

பல்வகைக் காணிக்கை:

பங்குனி உத்தரத் திருநாள்களில் அன்பர்கள் கொளஞ்சியப்பருக்குச் செலுத்தும் நேர்த்திக் கடன்கள் பலவகையின, உண்டியலில் பொன்தாலி, குண்டு, வெள்ளியில் பரு முதலியன நீங்கப் பெற்றவர்கள் அதன் வடிவில் செய்து வழங்கும் பரு உருண்டை, கண்ணடக்கம், மனிதர் கை, கால், வயிறு, மார்பு வடிவில் செய்யப்பெற்ற வெள்ளி உடல் உறுப்புக்கள், தொட்டிலில் கிடக்கும் குழந்தை வடிவங்கள் யாவும் நேர்த்திக்கடனாகச் செலுத்தப்படுகின்றன. இவையன்றி கருவறை பின்பக்கம் உள்ள வேப்பமரம், மற்றும் அரசமரங்களில் குழந்தை உறங்குவதுபோல ஒரு கல்வைத்துச் சிறு ஏணைகள் கட்டித் தொங்கவிட்டுப் பிள்ளை வரம் வேண்டுதலும் உண்டு. கோயில் சந்நிதியில் தொட்டில் கட்டுதல், பூஜைமணி வாங்கி வைத்தல், விளக்குகள் வாங்கி வழங்குதல் ஆகியன நடைபெற்று வருகின்றன.

எல்லாம் இறைவனுக்கே!

எல்லாப் பொருளும் கொளஞ்சியப்பரின்[1] அருளில் வந்தவை என்று கருதும் அன்பர்கள், தமக்குக் கிடைக்கும் எல்லாவற்றையும் இங்கே காணிக்கையாக வழங்குகின்றனர். நெல், கம்பு, கோழ்வரகு, சோளம், மணிலா, உளுந்து, பயிறு, கொள்ளு, நவதானியங்கள், மஞ்சள். முந்திரி, கனிவகைகள், பலா, வாழை, மா, அனைத்து வகைக் காய்கறிகள், பசுமாடுகள், காளைகள், எருமை, கன்றுகள், ஆடுகள் கோழிகள் என மக்கள் நேர்த்திக்கடன்கள் பலவாக அமைந்திருக்கின்றன. தானிய வகைகளுக்காகத் தனித்தனி அறை அமைந்த பெரிய தானியக் களஞ்சிய அறை திருக்கோயிலில் உள்ளது. தானியங்களும்

பிற நேர்த்திக்கடன் பொருள்களும் ஏலத்தில் விடப்பட்டு திருக்கோயிலில் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன. இவ்வகை நேர்த்திக் கடன்களால் சுமார் நாலுலட்சம் ரூபாய்க்குக் குறையாத வருவாய் அமைகிறது.

அன்னம் பாலித்தல்;

விழாநாள்களில் அன்பர்கள் தம் குடும்பத்தாருடன் வருகின்றனர். கோயில் வளாகத்தில், மற்றும் தெருவில், கிடைக்கும் இடத்தில் அடுப்பு மூட்டி உணவு தயாரித்து தாமே படையல் இட்டு நைவேதனம் செய்து மற்றவர் களுக்கும் வழங்கி, தாமும் உண்டு திரும்புதல் கண்கொள்ளாக் காட்சியாகும்.

பிறவிழாக்கள்:

பங்குனி உத்திரம் அல்லாது சித்திரை பௌர்ணமி நாளில் 1008 பால்குடம் எடுத்து வந்து கொளஞ்சி யப்பருக்கு அபிடேகிக்கப் பெறுகிறது.

வைகாசித் திங்கள் வசந்த உற்சவம் பத்து நாட்கள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அந்நாள்களில் இலட் சார்ச்சனை விமரிசையாக நடைபெறும். நிறைவு நாளன்று கொளஞ்சியப்பர் விநாயகப் பெருமானுடன் மணவாள நல்லூருக்குச் சட்டத் தேரில் வீதி வலமாக எழுந்தருள் கிறார். பங்குனி உத்திரம் பத்து நாள்களிலும் புறப்பாடு அவ்வாறே நிகழ்ந்து வருகின்றது.

மாதந்தோறும் கார்த்திகை நாளன்று சிறப்பான அபிடேக ஆராதனைகள் நிகழ்ந்து வருகின்றன. சந்தனத் தால் செய்து வைக்கப் பெற்றுள்ள முருகன் திருவுரு வத்தைப் பீடத்தின் மேல் நிறுவி கிரீடம் அணிவித்து, உருவத் திருமேனியில் கொளஞ்சியப்பரை அலங்கரித்து வழிபடுகின்றனர்.

ஆடிக்கிருத்திகை சிறப்பாக நிகழும். அன்றும் காவடிகள் வருகின்றன. ஐப்பசித்திங்கள் கந்தர் சஷ்டி ஆறுநாள்களும் கொளஞ்சியப்பர் ஆறுவகையில் அலங்கரிக்கப்படுகிறார். லட்சார்ச்சனை நடைபெறும்.

புரட்டாசித்திங்கள் மகாளய அமாவாசை அன்று பிரபல பாடகி எம். ஆர். விஜயா அவர்கள் தம் தாயார் திருமதி சாரதாம்பாள் பெயரில் அமைத்துள்ள அறக்கட்டளையிலிருந்து ஏக தின லட்சார்ச்சனை நிகழ்த்தப்படுகிறது. இவ்வாறு நிலை நிதி அமைத்துள்ள அன்பர்கள் பலர் உண்டு. சுமார் 500 அன்பர்களுக்கு மாதந்தோறும் கொளஞ்சியப்பரை அர்ச்சித்து விபூதிப் பிரசாதம் அஞ்சல்வழி அனுப்பப்பெற்று வருகிறது. பெற்றோர் தம் குழந்தைகளுக்கு முடியிறக்குதல், காதணி செய்வித்தல் முதலியவற்றை நிகழ்த்துகின்றனர். ஏராளமான திருமணங்களும் இங்கே நடைபெறுகின்றன. தை வெள்ளி, ஆடி வெள்ளிகளில் மாவிளக்கு இட்டு வழிபடும் பழக்கம் உள்ளது.

கலியுகத் தெய்வமாகிய கொளஞ்சியப்பர் நம் அன்பர்களின் காணிக்கையில் மகிழ்வதைவிட அவர்கள் அன்பில் நிறைகிறான். அவர்கள் ஆர்வத்தில் நிறைகிறான். நாளும் அவன் அருள் வீச்சு அதிகரித்துக் கொண்டே வருகிறது. கூட்டம் நிறைகிறது. கோயில் வளர்கிறது. ஐயன் தண்ணருள் வெள்ளம் தரணி எல்லாம் பாய்கிறது.

## இயல் : ஐந்து

# திருக்கோயில் நிர்வாகம்

அறநிலையத்துறை ஆட்சி:

மணவாளநல்லூர் அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில் நிர்வாகம் இன்று, தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் அமைந்துள்ளது. தொடக்க காலத்தில், இத்திருக்கோயில் இனங்காணப்பட்டு சிறு கீற்றுக்கொட்டகையில் அமைந்திருந்த போது, இப்பகுதியில் வாழ்ந்திருந்த வேளாளர் குடியினரால் வழிபாடு நிகழ்த்தப் பெற்று வந்ததாகத் தெரிகிறது. திருக்கோயில் வருவாய் பெருகியபின், இவ்வாலய நிர்வாகம், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் கொண்டு வரப்பெற்று, இன்று, படிப்படியே வளர்ந்து, வருவாய் அடிப்படையில் முதல்நிலைக் கோயிலாகத் திகழ்கிறது.

காமிக ஆகம பூஜை:

அருள்மிகு கொளஞ்சியப்பர் ஆலயம் இன்று ஆகம நெறியிலான பூஜை முறையில் விளங்கி வருகிறது. சிவாசாரியப் பெருமக்களால் நித்திய — நைமித்திக பூஜைகள் காமிக ஆகம நெறியில் நடைபெற்று வருகின்றன. நாள்தோறும் நாலு கால பூஜை மேற்கொள்ளப் பெற்று வருகிறது. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின், மயிலாடுதுறை துணை ஆணையரின் கீழ், கடலூர் உதவி ஆணையரின் ஆளுகையில் முதல்நிலை நிர்வாக அதிகாரியின் நேரடிக் கட்டுப்பாட்டுள் கோயில் நிர்வகிக்கப் பெற்று வருகிறது. பரம்பரை அறங்காவலர் முறை இத்திருக்கோயிலில் இல்லை. அறங்காவலர் குழு உறுப்பினர்களாலும், அவர்களில் தேர்ந்தெடுக்கப் பெற்ற அறங்காவலர் குழுத் தலைவர் ஒருவராலும் தொடர்ந்து நிர்வாகம் நடைபெற்று வந்துள்ளது. தற்போது அறங்காவலர்

குழு இல்லை. கடலூர் உதவி ஆணையரே தக்காராகச் செயற்பட்டு வருகிறார்.

சிவாசாரியர்கள்:

வேத சிவாகமப் பயிற்சிபெற்ற முருகப்பெருமான் மீது அளப்பரிய பக்தி கொண்ட சிவாசாரியர் மூவர் முறையாக நித்திய -நைமித்திக பூஜைகளை நிகழ்த்தி வருகிறார்கள். நாலுகாலமும் முறையான அபிடேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. சிவாசாரியர்கள் அருவுருவத் திருமேனி கொண்ட கொளஞ்சியப்பரைத் தம் கைவண்ணத்தில் சந்தனக்காப்பிட்டு அற்புத அழகிய உருவத்திருமேனியாக மாற்றி வழிபட வருவோர்க்கும் பேரீடுபாட்டை உண்டாக்கும் திறம்படைத்தவர்கள். இவர்களின் பக்திச் சிரத்தையான ஈடுபாடு காரணமாகவே பக்தர் கூட்டம் பெருகி வருவதாகத் தெரிகிறது. இவர்களுக்குத் திருக்கோயிலிலிருந்து மாத ஊதியமும், பல்வேறு காணிக்கைச் சீட்டுகளின் வருவாயில் பங்கு தொகையும் வழங்கப்படுகிறது.

நிர்வாக அதிகாரி

தமிழ்நாடு அரசின் நேரடி ஊதியம் பெறும் நிர்வாக அதிகாரி ஒருவரால் நிர்வாகம் செய்யப்பட்டுவரும் இத்திருக்கோயிலில், ஒரு தலைமை எழுத்தர், ஒரு காசாளர், தட்டெழுத்தர், சீட்டு விற்பனை எழுத்தர், விடுதிப் பொறுப்பு எழுத்தர், கடைநிலை ஊழியர் என சுமார் இருபது பேர் பணியாற்றி வருகின்றனர். கோயில் வளர்ச்சி, விழாக்களைச் சிறப்பாக நடத்துதல், வழிபட வரும் அன்பர்களுக்கு உரிய வசதிகளைச் செய்து தருதல், வருவாய்ப் பெருக்கம் முதலியவற்றில் நிர்வாக அதிகாரியும் அலுவலகப் பணியாளர்களும் பெரும் பங்கு ஆற்றி வருகின்றனர். திருக்கோயில் பெரிதும் தூய்மையாகவும், சாநித்தியத்துடனும் இங்கே பராமரிக்கப்பட்டு வருகிறது.

திருக்கோயிலுக்கு விருத்தாசலம் இணைப்பகத்துடன் இணைந்த தொலைபேசி வசதியும் உண்டு. தொலை பேசி எண்: 232. மணவாளநல்லூர் தனி அஞ்சலகம் கொண்டது. அஞ்சல் குறியீட்டுஎண் 606003. தந்தி அலுவலகம் விருத்தாசலம் தலைமை அஞ்சலகம்.

பக்தர்கள் வசதிக்காக:

அருள்மிகு. கொளஞ்சியப்பர் ஆலயத்தின் ஆண்டு வருவாய் தற்போது 12 லட்சத்தைத் தாண்டி விட்டதாகத் தெரிகிறது. உண்டியல் வருவாய்-காணிக்கை ஏலம்-சீட்டு விற்பனை கடைகள் -விடுதிகள் வாடகை முதலியனவற்றால் இத்தொகை ஈட்டப்படுகின்றது. இரண்டு ஏக்கர் அளவே நிலச்சொத்து உள்ளது, திருக்கோயில் வளாகத்தில் பக்தர்கள் தங்குவதற்கென அமைக்கப்பெற்றுள்ள விடுதி அறைகள் 10 உள்ளன. கட்டி முடிக்கப்படும் நிலையில் மேலும் 11 அறைகள் விரைவில் அன்பர்களுக்குக் கிடைக்கவுள்ளன. இவற்றில் அறைக்கட்டணம் மிகக் குறைவாக ரூ. 6-00 மட்டுமே பெறப்படுகிறது. சிறந்த வசதிகளுடன் கூடிய விருந்தினர் விடுதியும் இங்கே உண்டு. கீழே மூன்று அறைகள், மாடியில் மூன்று அறைகளாக இது ஆறு அறைகளைக் கொண்டது. இங்கே அறைவாடகை ரூ 12.00 மட்டுமே.

திருமணக்கூடங்கள்:

கொளஞ்சியப்பர் திருக்கோயில் வளாகத்தில் சகல அடிப்படை வசதிகளும் கொண்ட கொளஞ்சியப்பர் திருமண மண்டபம் ஒன்றும், அன்புத்திருமண மன்றம் ஒன்றுமாக இரண்டு திருமண மண்டபங்கள் உள்ளன. முன்னதற்கு வாடகை ரூ. 1050ம் பின்னதற்கு வாடகை ரூ 650-00 பெறப்பட்டு வருகின்றன. முருகன் சந்நிதியில் நடைபெறும் திருமணங்களுக்கு ரூ 30-00 மட்டும் கட்டணம் பெறப்படுகிறது. பெரிய நிகழ்ச்சிகள் நடத்தத்தக்க திறந்த வெளிக் கலையரங்க மேடை ஒன்றும் இங்கே உள்ளது.

அருள்மிகு கொளஞ்சியப்பர் சந்நிதியில் ஐந்து நிலை களோடு கட்டப்பட்டு வரும் அழகிய சுதை வேலைப் பாடுகள் அமைந்த இராஜகோபுரம் விரைவில் குடமுழுக்குப் பெறவுள்ளது. திருக்கோயில் கும்பாபிடேகம் கடைசியாக கி.பி. 1964இல் நடைபெற்றதாத் தெரிகிறது. இராஜ கோபுரக்குடமுழுக்கோடு திருக்கோயில் குடமுழுக்கும் நடைபெறக்கூடும் என்று தெரிகிறது. திருக்கோயிலின் வடபால் நெடுஞ்சாலையில் திருக்கோயிலுக்குச் சொந்தமான க்டைகள் 18 உள்ளன. இவற்றிற்கு ரூ 60-00, மற்றும் ரூ 25-00 வாடகை வசூலிக்கப்பட்டு வருவதாகத்தெரிகிறது.

அன்பில்லம்:

முற்குறித்தவாறு உற்சவ விக்கிரகங்கள் கொளஞ்சி யப்பருக்கும், சித்திவிநாயகருக்கும் உள்ளன. முருகன் உலா வர வெள்ளிமயில் வாகனமும் செய்யப்பட்டுள்ளது. திருக் கோயிலில் நாள்தோறும் வரும் சேவார்த்திகள் ஐம்பதின் மருக்கு நண்பகல் மட்டும் இல்வச உணவு வழங்கப் பெற்று வருகிறது. சுமார் 20 வருடங்களுக்கு முன்னதாகவே திருக் கோயில் நிதியிலிருந்து வழங்கப் பெற்ற சுமார் ஒன்றரை லட்சம் ரூபாய் மூலதனத்தில் தொடங்கப் பெற்ற அரசினர் ஆடவர் கலைக் கல்லூரிக்குக் கொளஞ்சியப்பர் பெயர் சூட்டப்பட்டுள்ளது. திருக்கோயில் நிதியிலிருந்து 100 மாணவர்கள் இலவச உணவும், உறையுளும் பெற்றுக்கல்வி கற்று வரும் அன்பில்லம் ஒன்றும் நடைபெற்று வருகிறது. தொடக்கக்கல்வி முதல், மேல் நிலைக்கல்வி வரை பயிலும் திக்கற்ற மாணவர்கள் இங்கே ஆதரிக்கப்பட்டு வருகின்ற னர். சித்தவைத்திய சாலை ஒன்றும் இங்கே இல்வசமாக் இயங்கி வந்துள்ளது. தற்போது அது செயற்படவில்லை என த்தெரிகிறது.

மணவாள நல்லூா:

திருக்கோயில் பங்குனி உத்திரப் பெருவிழாவிற்குப் பத்துநாள்களுக்கும் நிரந்தரமான உபயதாரர்கள் பலர்

உள்ளனர். பிறவிழாக்களுக்கும் உபயதாரர்கள் உண்டு திருக்கோயில் சார்பிலும் விழாச்செலவுகள் மேற்கொள்ளப் பெறுகின்றன. தற்போது திருக்கோயில் அமைந்துள்ள இடத்திற்குத் தெற்கே இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் 500 வீடுகளைக் கொண்ட மணவாளநல்லூர் கிராமம் அமைந்துள்ளது. தனிப்பஞ்சாயத்து ஆட்சிக்கு உட்பட்ட இக்கிராமத்தில் அருள்மிகு மீனாட்சி உடனமர் சொக்க நாதர் திருக்கோயில் அமைந்துள்ளது. மற்றும் இங்கே ஐயனார், செல்லியம்மன் திருக்கோயில்களும் உள்ளன. கடைசியாக இக்கோயில்களுக்கு கி. பி. 1987 இல் குட முழுக்கு நிகழ்ந்தேறியது. மணவாளநல்லூர் திருக்கோயில் களும் கொளஞ்சியப்பர் திருக்கோயில் நிர்வாகத்திற்கு உட்பட்டனவேயாகும்.

வாழ்த்து:

மணவாளநல்லூர் அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக் கோயில் வளர்ச்சிக்குத் துணைநின்ற அறங்காவலர் குழு வினர்களும். அடுத்தடுத்துப் பொறுப்பேற்ற அறங்காவலர் குழுத்தலைவர்களும், பக்தி ஈடுபாடு மிக்க நிர்வாக அதிகாரி களும், அலுவலகப் பணியாளர்களும், அறநிலையத்துறை அதிகாரிகளும், சிவாசாரியப் பெருமக்களும். உபயம் செய்து வரும் அன்பர்களும், கொளஞ்சியப்பரின் சீர் அடியார்களும். மணவாளநல்லூர் மக்களும், பல்வேறு துறை அதிகாரி களும், விருத்தாசலம் மெய்யன்பர்களும் இங்கே நினைவு கூர்ந்து நன்றி செலுத்தத்தக்கவர்களாகின்றனர். அவர்கள் அத்துணை பேருக்கும், மணவாளநல்லூர் அருள்மிகு கொளஞ்சியப்பர் அருள் வரலாற்று நூலை எழுதச்செய் வித்துப் பெரும்பொருட் செலவில் வெளியிட்டு உதவும் மயிலாடுதுறை, ரயிலடி ஏ. டி. எஸ், நிறுவனங்களின் உரிமையாளர் திரு. ஆ. தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் அவர்தம் துணைவியார் மற்றும் செல்வக்குமாரர்களுக்கும் அருள்நிறை கொளஞ்சியப்பரின் தண்ணருள் துணை நிற்கும் என்பது உறுதி. ——— முற்றும்

கொளஞ்சியப்பர் சந்நிதியில் அமைந்துள்ள




கம்பீரமான, அலங்காரக் குதிரைகள் (சுதை)

# கௌஞ்சியப்பர் பிள்ளைத்தமிழ்

## (தவத்திரு தி. செ. முருகதாச சுவாமிகள்)

### காப்புப் பருவம்
### வேல், மயில், சேவல்

கந்தக் கடம்பனைக், குல்லையந் தொடையல்பல
கமழ்வேல னைப்,பராவிக்
கவின்அருணை யூரில்வந் திடும்அருண கிரிநாதர்
கழறுசுவை மிகும்விருத்தம்,
சந்தத்தி ருப்புகழ்,வ குப்புடன் போற்றிடத்
தக்கதன் மையில்வி ளங்கும்
சத்திவே லைக்,கொடிச் சேவலை,ம யிற்பறவை
தன்னை,யன் பொடுபோற் றுவாம்
பந்தத்தொ டக்கர்கண் காணொணாப் பழமலைப்
பக்கமண வாள நல்லூர்ப்
பதியினிற் றொண்டர்பலர் காவடியெ டுத்துப்
பராவிடுமெய் யன்பர் தங்கள்
சிந்தனைக் கேற்றபடி நாடோறும் அருள்செயும்
திருவருட் பேற்றி னானைச்
செல்வக் கொளஞ்சியப் பக்குமர வேலைத்
தினந்தொறும் காப்பதற்கே.

(இ — ள்) வாசனைமிக்க கடம்ப மாலையும், வெட்சி மலர் மாலையும் பூண்ட வேலவனைப் போற்றுமன்பர் துணையாக, திருவண்ணாமலையிற் றோன்றிய அருணகிரி நாதரால், வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், வகுப்பு - இவற்றால், பாடப் பெற்றதான வேல், கொடியாயுள்ள சேவல், ஊர்தியாயுள்ள மயில் இவற்றைப் பணிவேன். ஏனெனில், உலக ஆசையிற் கட்டுப் பட்டவர் காணற்கரிய பழமலையென்ற விருத்தாசலத் தருகில் உள்ள மணவாள நல்லூரில், காவடி யெடுத்து வரும் பல தொண்டர் விரும்பியபடி அருள்புரியும் கொளஞ்சியப்பனைக் காப்பதற் கென்பதாம்.

## செங்கீரைப் பருவம்

### கோவிலமைப்பு

### மூர்த்திச் சிறப்பு

*மாலவன் கொண்டமோ கினிவடிவி னிற்சிவன்*
*மாலவன்எ னாவுற்ற நாள்*
*வந்தஅரி கரபுத்தி ரப்பெயர்கொள் ஐயனார்*
*மன்னுதுணை யாய்க்கு லாவ*
*ஞாலமுடை யோர்பலர் விருத்தநற் காசியாய்*
*நவில்பழம லைக்க ணித்தாய்*
*நண்ணுமணி முத்தாற்றின் அருகிலவிர் கோயிலின்*
*நடுக்குலவி, அருவு ருவமாய்,க்*
*கோலமுறு குமரனுரு வாய்அன்பர் போற்றியே*
*கும்பி டவருங்கு ருந்தே*
*குலவுபசு பால்சொரிந் திடஏற்ற குழகனே!*
*குவடுதொறும் அவிரு முருகா!*
*சீலர்கா ணிக்கைகள் செலுத்தஅருள் புரிகுகா*
*செங்கீரை யாடி யருளே*
*சீர்கொள்மண வாளநல் லூர்க்கொளஞ் சிக்குமர*
*செங்கீரை யாடி யருளே*

(இ—ள்) பத்மாசுரனை யழிப்பதற்காக மாலவன் மோகினி வடிவுற்றபோது சிவன் மாலவனாகி மோகினி யோடு கூடியபோது உதித்த அரிகரபுத்திரர் (ஐயனார்) துணையாகி விளங்கக் கொண்டாய். உலகர் விருத்த காசியென வழங்கும் விருத்தாசலத்தின் பக்கம் கோயில் கொண்டு மணிமுத்தாற்றருகில் உள்ளனை. அருவுருமான பீடத்திலிருந்து அன்பர் பரவத் திருவுருக் கொண்டு முருகனாக இருக்கின்றாய். பசு தினமும் பால் தானே சொரிவதை ஏற்றாய். மலை பலவற்றிலும் விளங்கினாய் அன்பர் செலுத்தும் காணிக்கைபல பெற்று வந்தாய் கொளஞ்சியப்பனே! செங் கீரையாடுக என்பதாம்.

## தாலப்பருவம்

## முருகன் அமிச அவதாரங்கள்

காழியிற் சிவபாத இதயர்தவ மாய்த்தமிழ்க்
கவிஞான சம்பந் தனாய்க்
காருடற் சமணஇருள் ஓடிடவெண் ணீற்றின்ஒளி
காணஒரு பால னானாய்!
பூழியச் சோமசுந் தரனாகி அரன்வந்து
பொருவில்மீ னாம்பிகை மணம்
பூண்டநாள் உக்கிரகு மாரனென வந்தடற்
புணரியற வேல்வி டுத்தாய்!
வாழிய தமிழ்ச்சங்க நாவலருள் ஐயமற
வாயடைத் துஊஊ மையாய்
மருவுருத் திரசன்ம னாகினாய்! ஆய்ச்சியர்தம்
மனையுறியி லேற்றி வைத்த
தாழியவிர் வெண்ணெய்தயிர் உண்டமால் மருகனே
தாலேலல தாலே லவே
சரவணப வா!கொளஞ் சிக்குமர நாயகா!
தாலேலல தாலே லவே.

(இ—ள்) சமண இருளை மாய்த்திட, நீற்றொளி வளர்த்திட, சீகாழியில் சிவபாத இருதயர் செய்த தவப் பயனாகத் திருஞானசம்பந்தர் என்று அவதாரமானாய், சிவபெருமான் சோமசுந்தரப் பெருமான் வடிவந்தாங்கி மீனாட்சியை மணம் செய்ய வந்த சமயம் உக்கிரகுமார பாண்டியன் என்ற பெயருடன் வந்தருளினாய். சங்கப் புலவர்கள் உண்மை உரை கண்டு உணர முடியாது வருந்திய காலத்தில் உருத்திர சன்மன் என்று அவதாரமாகி ஊமைத் தன்மை கொண்டு வந்தாய், ஆயர்குலப் பெண்களின் தயிர், பால், வெண்ணெய் முதலியவற்றைத் திருடி உண்ட திருமாலின் மருமகனே! தாலேலலவே. சரவண பவனே! கொளஞ்சியப்பப் பெருமானே! தாலேலலவே.

## சப்பாணிப் பருவம்

### இறைவனைச் சுட்டிக்காட்டியது

ஆறனைத் தும்கடலின் நீரனைத் தும்பெருகி
அகிலமுழு தினும்நிறைந்தே
அழிபோதும் அழியாத தோணிபுர மாம்பதியில்
அன்றுசம் பந்தனாகித்
தேறவரும் நாளினிற் சிவபாத இருதயர்
தினஞ்செய்நிய மப்படிக்கே
செல்போதி னிற்றானும் உடன்வர விரும்பல்போற்
சென்(று) அவர் குளத்தில் மூழ்க
ஊறலவிர் நீர்க்குளக் கரையில்நின் றழும்வேளை
உமையொடரன் வந்து பாலை
ஊட்டவுண் டுறுபோதி னிற்றந்தை யார்தந்த(து)
ஓதுகென உறுமு போதில்
கூறஒரு விரல்நீட்டி இவனெனும் கைகொண்டு
கொட்டியருள் சப்பாணியே
குலவுபழ மலையருகில் அவிர்கொளஞ் சிக்குமர
கொட்டியருள் சப்பாணியே.

(இ—ள்) உலகமெல்லாம் நீர்ப் பெருக்கினால் அழியும் போது தோணியாய் மிதந்து அழியாத சீகாழியில், ஞானசம்பந்தராக அவதரித்து மூன்றாவது ஆண்டில், தந்தையார் வழக்கப்படி பிரமதீர்த்தத்தில் நியமமுடிக்கச் சென்றபோது, தானும் உடன் வரவிரும்பினர் ஞானசம்பந்தர். அதன்படி தந்தையுடன் சென்று அவர் நீரில் முழுகிய சமயம், காணாமையால் அழுதனர். அப்போது சிவபிரான் உமையுடன் தோன்றி, உமையவள் பாலமுது பொற்கிண்ணத்தில் கொடுத்து உண்ணவூட்டினர். தந்தைவந்து பால் எவர் உதவினாரென்று கோபித்து அதட்டினர், இதோ இவன்! என்று தன்கை விரலால் சுட்டிக்காட்ட முன்வந்த உன் கைகளாற் சப்பாணி கொட்டு கொளஞ்சியப்பா என்பதாம்.

## முத்தப் பருவம்

முருகன் அமிசமான அவதாரத்தில் முத்தம் பெற்றவர்கள்

அந்தண் பிரம புரப்பிள்ளை
யாய்நீ முன்னம் அவிர்ந்திடும்நாள்
அப்ப னான சிவபாதர்
அன்னை பகவ தியும்பெற்றார்
உந்த வரும்உக் கிரகுமரன்
உருவாய் மதுரை யினில்வரும்நாள்
ஒளிர்சீர்ச் சோம சுந்தர னோ(டு)
உயர்மீ னாம்பி கையும்பெற்றார்,
பிந்த உருத்ர சன்மனெனும்
பெயரில் ஊமை மகவாம்நாள்
பெற்ற தாயும் தந்தையும்முன்
பெற்றார், இந்நாள் உலகறிய
முந்தம் முறைபோல் எமையேற்று
முருகா முத்தம் கொடுத்தருளே
முந்நீர்ப் புவிசொல் கொளஞ்சியப்பா!
முதல்வா; முத்தம் கொடுத்தருளே.

(இ—ள்) சீர்காழில் திருஞானசம்பந்தராக வந்தபோது சிவபாத இருதயரும், பகவதியாரும் உன் முத்தம் பெற்றனர். மதுரையில், உக்கிர குமாரனாக அவதரித்த போது சோமசுந்தரரும் தடாதகையாரும் பெற்றனர். பின் உருத்திரசன்மரென்ற ஊமை மகவாகிய போது, தாய் தந்தையர் பெற்றார்கள். அம்முறையைக் கருதி இன்று எமது அன்பையேற்று, கொளஞ்சியப்பா முத்தம்கொடு என்பதாம்.

## வருகைப் பருவம்

கள்ளிருக் கும்பூம் பொழிற்கச்சியூரிற்
கவின்குமர கோட்டமென்னக்
காணும்நின் கோவிலில் உனைப்பூசை செய்திடும்
கச்சியப் பப்பெயரினோன்
தெள்ளிய தமிழ்ப்புலமை பெறுசிவா சாரியன்
திகழும்நின் அவதாரமும்
தீயஅசு ரர்ச்செற்ற வீரமும் தீரமும்
செறிவள்ளி குஞ்சரிமணம்
கொள்ளினிய கந்தப்பு ராணவர வாற்றுநூல்
கூறுமுத லாம்பாட்டினில்
குலவுமுத லாஞ்சொல் இலக்கணப் பிழையென்று
கோள்சொல்புல வோர்களறிய
நள்ளினிய புலவனா வந்துரை செய்யுங்குமர
நனிவருக வருகஅருகே
நாதாகொ ளஞ்சியப் பா!வேல வா!என்முனம்
நனிவருக வருகஅருகே.

(இ-ள்) தேன் நிறைந்த பூமரச் சோலையுள்ள காஞ்சி புரத்தில் குமரகோட்டமான திருக்கோவில் முருகனாலயம். அதில் பூசை புரிபவர் கச்சியப்பக் குருக்கள். அவர் முருகன் அவதாரம், அசுரர் அழிப்பு, வள்ளி தெய்வயானை திருமணம் இவற்றை விளக்கிக் 'கந்தபுராணம்' பாடினர். அரங்கேற்று சபையிற் புலவர்கள் நூல் ஆரம்பமான முதற் பாட்டின் முதற்சொல் இலக்கண வழுவென்றனர். அச் சபையில் முருகன் புலவனாகத் தோன்றி, வீரசோழியம் என்ற இலக்கணத்தில் ஆதரவுகாட்டி விளக்கினர் என்பது வரலாறு. அப்படிப் புலவனாக வந்த கொளஞ்சியப்பனே இப்போது என்முன்வருக என்பதாம்.

## அம்புலிப் பருவம்

### முருகன் - சந்திரன் ஒப்புமை

குளிரமுத கிரணம் பரப்பிடுவ தால், சுரர்
குலம்பரவு கின்ற பண்பால்.
குலவும்நின் மரபாளர் வாழ்பாண்டி நாட்டினிடை
கூடும்உற வால், மக்கள் தாம்
களியகல வருவெப்பம் மாறச்செய் தண்மையால்
கவுரிமகிழ் வுறுதன்மையால்,
கருதவரும் இந்தவித ஒருமையுறு பண்பினால்
கந்தன்உனை வரவிரும்பல்
எளிதென்ன எண்ணிவரல் இல்லாதி ருந்திடேல்!
இறுமாப்பு மெய்த வேண்டாம்!
ஈதுனது தவம்என்று கருதிவிரை வினில்வருதி!
என்னில்,நிறை மதியாகுவாய்
அளிமுரல் பொதும்பர்மலி மணவாள நல்லூரில்
அம்புலீ ஆடவாவே
அன்பர்கள் விரும்பிய கொளஞ்சியப் பன்றனுடன்
அம்புலீ ஆடவாவே,

முருகன் பகுதி: குளிர்ந்த கருணையுடைமை, தேவர்கள் வணங்குதல், மக்கள் பிறவி வெப்பம் மாற அருள்புரிதல், அம்பிகை மகிழ விளங்குதல், பாண்டியர் சந்திரமரபு-அதில் உக்கிரகுமாரனா யவதரித்தது.

சந்திரன் பகுதி: குளிர்ச்சியான நிலவுடைமை, தேவர் கள் மகிழப் பாற்கடலில் உதித்தல், வெய்யில் வெப்ப மாற்றத் தன்மையைச் செய்தல், உமையம்மை வழி பாட்டுக்கு முழுமதியமாகுதல், பாண்டியர் சந்திர மரபு, சோழர் சூரிய மரபு என்பது வழக்கு. நிறைமதி - முழுமதி (அறிவு நிரம்பப் பெற்றவன்).

## சிற்றிற் பருவம்

## முருகன் திருவடியின் புகழ் கூறுதல்

கூரார் வேலை விடுத்தொர்கைக்கோல்
  கொண்டு பாலை யினில்,உச்சி
  குலவும் போதில் நடந்தபதம்
தாரா ளமதாய் வேடவுருத்
  தாங்கி ஏனற் புனத்தினிடை
சாரும் வள்ளி தனைக்காணத்
  தனியே நடந்த திருப்பாதம்;
சீரார் அருண கிரிமுனியும்
  திகழ்ந்த வடலூர் அடிகளும்முன்
செய்ய தமிழாற் றுதித்தநின் றன்
  சிறப்பைச் சிறிதே தெரிந்துள்ளோம்
தேராய் போல யாம்அமைத்த
  சிற்றில் சிதையேல் சிதையேலே
தெய்வப் புலவா! கொளஞ்சியப்பா!
  சிற்றில் சிதையேல் சிதையேலே.

(இ-ள்) பொய்யாமொழிப் புலவரின் தமிழ்ப் பாடலைக் கேட்க விரும்பிப் பாலைநிலத்தில் முட்டை என்ற பெயருடன் நடந்த பாதம், வள்ளியம்மையை மணக்கவேண்டி வேட வுருவில் குமார, விருத்தனாகக் கானகத்தில் நடந்த பாதம், அருணகிரிநாதரும், வடலூர் வள்ளற் பெருமானும் அருட்புகழால் ஓதித் துதித்த பாதம் என்றெல்லாம் உன் திருப்பாதத்தின் சிறப்பை அறிந் துள்ளோம். திருவடிப் பெருமையை யாங்கள் அறியாதவர் கள் என்றெண்ணி யாங்கள் அமைத்த சிறிய இல்லத்தை நின் திருவடி கொண்டு அழிக்க வேண்டாம். தெய்வப் புலவனே! கொளஞ்சியப்பப் பெருமானே!சிறியேம் சிற்றில் சிதையேலே என்பதாம்.

## சிறுபறைப் பருவம்

### முருகன் அருளிப்பாடு

செந்தமிழ் இலக்கணம் குறுமுனிவ னார்அன்று
தெரிதர வுணர்த்த லுற்றாய்!
சிவபிரா னிடம்வேத முதலாய பிரணவத்
தின்பொருள் உணர்த்த லுற்றாய்!
உந்தருண கிரிநா தன் அறியுமா(று) ஆறெழுத்(து)
உபதேசம் ஓதி யாண்டாய்!
ஓதுகலை மாதுணர அருளிலக் கணம்நன்(கு)
உரைக்க வுற்றாய்! உயர்ந்த
சந்தவகை எட்டெனத் தக்கநல் இலக்கணம்
தண்டபா ணிக்கருளி னாய்!
சாற்றுமிவை யனையபல அருளாடல் அன்பர்முன்
சந்ததம் செய்து வரும்நீ
சிந்தவிர் புவிக்கணுள மக்களிடை சென்றுநீ
சிறுபறை முழக்கி யருளே
திருவார்கொ ளஞ்சியப் பா!வேல வா! யின்று
சிறுபறை முழக்கி யருளே.

(இ-ள்) தமிழ்மொழிக் கிலக்கிணம் அகத்தியருணரக் கூறியும், சிவபிரான் உணரப் பிரணவப் பொருள் கூறியும், அருணகிரிநாதருக்கு ஆறெழுத்து உபதேசித்தும், கலை மகட்கு அருளிலக்கணம் போதித்தும், சந்தம் எட்டு என்ற வகையைத் தண்டபாணி சுவாமிகட்கு உணர்த்தியும், இவை போன்ற அருளாடல் செய்த நீ, கடல்சூழ்ந்த பூவுல கில் மக்களிடை சென்று சிறுபறை முழக்குக கொளஞ்சியப் பனே என்பதாம்.

## சிறுதேர்ப்பருவம்

### நலம் பெற வேண்டல்

மலய மலையாம் பொதியையிற்சார்
மந்த மாரு தச்சிறுகால்
மருவுந் தென்றற் றேர்ஊரும்
மதன்கை வாளி தொடராமல்,
கலகச் சமன்தூ துவர்கூடிக்
கடும்போர் விளைக்கக் கருதாமல்,
கமலப் பிரமன் இன்னும்ஒரு
கவினார் உடலம் கணிக்காமல்
நலமற் றிடச்செய் நோய்சூழ்ந்து
நண்ணும் உடலை நலிக்காமல்
நாடும் உள்ளம் பலதுயரால்
நடுக்க முறாமல், உனைப்பணிந்தே
உலகத் தியங்கத் திருவுளம்கொண்(டு)
உருட்டி யருளாய் சிறுதேரே
ஒளிர்சீர்க் கொளஞ்சி யப்பா! நீ
உருட்டி யருளாய் சிறுதேரே.

(இ—ள்) மலயம் என்ற பொதியையில் தோன்றி, மந்த மாருதம் - சிறுகால் என வழங்கும் தென்றலைத் தேராகவுள்ள மன்மதன் வாளி தொடராமலும், தூதுவர்களை விட்டுக் கலகம் புரிந்து உயிர்களைக் கவரும் எமன்போர் நேராமலும், பிரமன் இன்னும் ஓர் உடல்தரக் கருதாமலும், நலம் கெடும்படி நோய்கள் வந்து உடலை நலிக்காமலும், மனம் பல ஆசையால் வருந்தாமலும், உலகில் வாழும்படி உனது சிறுதேரை உருட்டுக! கொளஞ்சியப்பா! என்பதாம்.

# முருகதாச சுவாமிகள் அருளிய திருப்புகழ்

## சந்தக்கவி

தனந்த தத்தன தானன -தனதானா

கரும்பெ டுத்தணி வார்சிலை
மணம்பெ ருத்திடு தேமலர்
கரந்தொ டுத்திடு வாளிகொள் மதன்வேதா

கரண்டம் உற்றிடு காரி உள்
வெகுண்டு றுக்கிடும் ஏமன் மை
கனன்றெ திர்த்தமர் ஆடிட நினையாதே

அரும்பி னுக்கிணை யாம்நகை
உறும்கு றக்கொடி வானுல(கு)
அவிர்ந்த சத்திகு லாவிட மயில்மீதே

அலர்ந்த பற்பல மாமலர்
சொரிந்து னைப்பணி மாதவர்
அறிந்த மெய்ப்பொருள் கூறமுன் வருவாயே

இருந்தை ஒத்திடு சாரணர்
இணங்க னைக்கழு ஏறிட
இயம்பு முத்தமிழ் வாணனில் வருவோனே

எதிர்ந்த ரக்கர்செய் போர்கெட
விடுஞ்ச மதுர்த்ள வேலவ!
இலங்க ருட்சிவை பால்நுகர் கனிவாயா

குருந்தெ னக்கம லாலயம்
இருந்த சிற்பர னே!அலர்
குருந்த டிப்பர மேசுரர் குருநாதா

குறிஞ்சி யப்ப! ச டாதரர்
குழந்தை யப்ப!பல் சீர்திகழ்
கொளஞ்சி யப்பவி ணோர்பணி பெருமாளே

## நோய்கள் தீரப் பெறுதல்

வாதபித் தச்சுரம் சன்னிகா மாலைகப
மன்னிவரும் ஈளை இருமல்
மண்டைவலி காதுவலி கண்வலிம கோதரம்
வயிற்றுவலி கண்ட மாலை

சூதகச் சன்னிஅக் கினிமந்தம் மேகநோய்
சொறிசிரங் கொடுசி லந்தி
தோயிரத் தக்குறைவி னால்வரும்அ யர்ச்சிமிகு
சோகைநீ ரிழிவு மூலம்

சாதல்உடன் உதவும்இத யத்துடிப் புறல்கொடுந்
தகைகொள்தொழு நோய்முத லவாய்ச்
சாரும்நோய் யாவையும் அடியவர்எய் தாமலருள்
சாமிநீ நேம முடனே

கோதகலும் அன்பர்பலர் காவடிகள் பலகொண்டு
கூடிவரு வார்க்கருள் செயும்
கொற்றவே லா!கொளஞ் சிப்பரம னே!வள்ளி
குஞ்சரிக் கினிய குகனே.

## காவடிகள் சிறப்பு

சக்கரைக ரும்புபால் இளநீர்பன் னீர்தயிர்
　　தயிலம்எலு மிச்சம் பழம்
சந்தனம்வி பூதிகூ டன்பழம் பூமாலை
　　தாங்குகா வடிகள் தோளில்

வைக்கவுடன் ஆவேச ராய்அரக ரோ!வள்ளி
　　மணவாள னே!சண் முகா!
வானவர்க் கிறைவனே! தெய்வானை கணவனே!
　　மயில்வாக னாஎன் னவே

மிக்கபே ரன்பினாற் கூவிஆ டிப்பாடி
　　மேவிடும்அ வர்க்கருள் செயும்
மெய்யான தெய்வமே! கலியினிற் கண்கண்ட
　　மேலான எம்கட வுளே!

திக்கனைத் தும்போற்றும் மணவாள நல்லூர்
　　சிறக்கவரும் வேற்பி ரானே!
திருவருள்மி குந்தவிர்கொ ளஞ்சியப் பா! நினது
　　திருவடித் துணைசர ணமே.

## துதிப் பாடல்கள்
## கொளஞ்சியப்பர் அருட்சிறப்பு

ஆலமுண் டான்மைந்த னாங்கொளஞ் சிக்குகன்
அன்பர்கட்குச்
சீலமுண் டாகும்நற் செல்வமுண் டாகும் சிவப்பொலிவார்
கோலமுண் டாகும் மனைமக்கள் சுற்றம் குலவிமகிழ்
காலமுண் டாகும் கதியுமுண் டாம்இது கைகண்டதே!

கதிபெறு வார்சீர் பெறுவார்விண் போற்றக் கவினுமருள்
நிதிபெறு வார்வே ளருள்பெறு வார்நிறை வுற்றசெல்வ
மதிபெறு வார்உடல் நோயற்ற வாழ்வில் மகிழ்ந்திடுவார்
துதிபெறு நம்கொளஞ் சிக்குகன் அன்புளம் தோய்பவரே!

நிலந்தரும் செல்வம் தரும்கல்வி யும்தரும் நீடுமுடற்
பலந்தரும் முத்திப் பயன்தரும் சீர்தரும் பைம்பொன்னிக்
கலந்தரும் நல்ல குலந்தரும் யாரும் கழறுபல
நலந்தரும் சீர்க்கொளஞ் சிக்குகன் பாத நளினங்களே.

## சித்தி விநாயகர் வெண்பா

சித்தி விநாயகனே! சீர்கொள்மண வாளநல்லூர்
நத்தி விளங்குகண நாதனே-பத்தியுடன்
வந்துவழி பாடுசெய்வார் வாஞ்சையெலாம் எந்நாளும்
தந்தருள்வாய்! நின்றாள் சரண்.

## இடும்பன் வெண்பா

மணவாள நல்லூரில் மன்னும் இடும்பா!
கணமாவந் தன்பர் களிக்கும்-குணமேவும்
சீரார் கொளஞ்சியப்பன் சிந்தைக் கினியானே!
தாராள மாகவரம் தா.

## கடம்பன் வெண்பா

நண்ணுறு மணவாள நல்லூரில் வாழ்கடம்பா!
எண்ணும் அடியார் இடர்தீர்ப்பாய் - பண்ணுடனே
பாடும் துதிசேர் பரன்கொளஞ்சி யப்பனன்பர்
நாடும் புகழனைத்தும் நல்கு.

## வாழ்த்து வெண்பா

வாழ்கமண வாளநல்லூர் வாழ்க கொளஞ்சியப்பர்
வாழ்கஅவன் தாள்பரவும் மாண்பினோர்-வாழ்கஇந்தப்
பாடல்முற்றும் அன்பாய்ப் படித்துணரும் அன்பரெலாம்
நாடருமின் பெய்திமெத்த நாள்.

# கொளஞ்சியப்பர் அருள் வரலாறு, நூலாசிரியர்,



**டாக்டர். இரா. செல்வக்கணபதி எம்.ஏ.,பி.எட்.,பிஎச்.டி.,**

* தருமை ஞானப் பண்ணையில் தமிழ்க்கல்வி பயின்று 1965 இல், ஆயிரம் ரூபாய்ப் பரிசு பெற்றவர்.
* தருமை, ஆதீனக்கலைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வருபவர்.
* தருமைக் குருமணி அருளாசியோடு தருமை ஆதீனத் தமிழ் வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்து, சென்னைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர்.
* நாடறிந்த சமய-இலக்கியச் சொற்பொழிவாளர்.
* இதுவரை ஆறு நூல்களையும், நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியவர்.
* சிறந்த கவிஞர்; சிந்தனையாளர்.
* தமிழ் இலக்கணங்கள், சங்க இலக்கியங்கள், சைவ சமயத் தத்துவ நூல்கள்-சேக்கிழாரில் நிறைந்த ஈடுபாடும், புலமையும் மிக்கவர்.
* தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் அங்கம் வகிப்பவர்.
* இந்திய நாடெங்கும், கடல் கடந்தும் சென்று சமய இலக்கியப் பணியாற்றி வருபவர்.
* பல்வேறு அமைப்புக்களால், சைவச் செங்கதிர், முத்தமிழ் அரசு, செந்தமிழ் வாரிதி. சைவத்தமிழ்மணி, செந்தமிழ்ச் செல்வர் முதலிய பட்டங்கள் வழங்கப் பெற்றவர்.